# கற்பகம்

தம்பு-சிவா



-/60 சதம்

ளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை-இலங்கை

கார்த்திகை - மார்கழி 1970

கலை இலக்கிய அறிவியல் ஏடு

அன்பளிப்பு

**கல்கி பீடி நிறுவனம்**
**79,** மெசஞ்சர் வீதி
கொழும்பு **12**

# எஸ். சின்னத்துரை அன் சகோதரர்.

யாழ்ப்பாணம் – கொழும்பு.

# அன்புசால் வாசகப் பெருமக்களே!

பத்திரிகையின் வளர்ச்சிக்கு வாசகப் பெருமக்களாகிய உங்கள் ஒவ்வொருவருடைய பூரண ஒத்துழைப்பும் இன்றியமையாததொன்றாகும். தமிழ்நாட்டுப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு அந்நாட்டு மக்களின் ஒத்துழைப்பே முக்கிய காரணமாகும். ஈழநாட்டு வாசகர்களாகிய நீங்கள், நம் நாட்டுப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதிற் தவறிருக்க முடியாதல்லவா?

ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள், பாவலர்கள் பலர் கவனிப்பாரற்ற நிலையில், வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல எழுத்தாளர்கள் இலைமறை காய்களாக இருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் ஆதரிப்பதற்காகவும், அவர்களை வளர்த்துவிடுவதற்காகவும் தொடங்கப்பட்ட இயக்கமாகிய "இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை" தனது வெளியீடான கற்பகத்தின் முதல் இதழை உங்கள் கரங்களிற் தவழவிட்டிருக்கின்றது. முதல் இதழாகிய "கற்பகம்" ஓரளவு நிறைவு பெற்றிருந்தாலும் முழுமை நிறைவையும் பெறவில்லையென்பது உண்மைதான். கற்பகத்தின் நிறைவிற்கு வாசகர்களாகிய நீங்கள்தான் முழுப்பொறுப்பாளர்களாவீர்கள். எனவே கற்பகத்தின் வளர்ச்சிக்கு, உங்கள் ஒவ்வொருவருடைய கருத்துக்களையும் மனநிறைவுடன் வரவேற்கின்றோம்.

கற்பகத்தைக் கலை, இலக்கிய, பொருளாதார, அறிவியல் இருதிங்கள் இதழாக வெளியிடுவதற்கு உத்தேசித்துள்ளோம். நடுநிலைமைக் கொள்கையை வகிக்கும் ஏடான கற்பகம் ஈழத்தின் கலை, இலக்கிய, பொருளாதார, அறிவியல் துறைகளுக்குத் தன் உண்மையான பங்கைச் செலுத்துவதற்கு முயல்கின்றது. எனவே, வாசகப் பெருமக்களாகிய உங்களை அதன் நற்பணிக்குக் கைகொடுத்து உதவும்படி "இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை" பணிவன்புடன் வேண்டி நிற்கின்றது.

வணக்கம்.

With the Best Compliments of

# Raja Films

Maiden Production

**"HITHUVAKKARAYO"**

92, PAMANKADA ROAD, COLOMBO - 6.

அன்பளிப்பு

ஸ்ரீவாணி விலாஸ்

256 மெசஞ்சர் வீதி - கொழும்பு 12.

வண்மை யுடையதொரு சொல்லினால் - உங்கள்
வாழ்வு பெறவிரும்பி நிற்கிறோம்.

— பாரதி.


# கற்பகம்

இருதிங்கள் ஏடு

மலர் 1 — கார்த்திகை - மார்கழி 1970 — இதழ் 1



## ஆசிரியர் குழு

- ● புலோலியூர் அன்பழகன்
- ★ மு. பொன்.
- ● திருமலை வேலன்
- ★ இணுவையூர் தொண்டு
- ● முத்து இராசரத்தினம்
- ★ வேலணை மாறன்.
- ● கல்வயல் வே. குமாரசாமி
- ★ மாதினி
- ● கரவை க. வீரன்
- ★ புலோலியூர் பார்த்திபன்
- ● சந்திரன்
- ★ சிவராசன்


கற்பகத்தில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே. கவிதை, கட்டுரைகளின் கருத்துக்கள் யாவும் அவற்றைப் படைத்த இலக்கியச் சிற்பிகளின் பொறுப்பு என்கின்ற கம்பீரமான பலத்தைச் சார்ந்து நிற்பவையாகும்.

✦ முகப்பின் அழகு தோற்றம்:- சிவா :-: உமா (11 வயது)


கற்பகச் சோலையில்......

அன்புசால் வாசக
வாழ்த்துரை - டாக்டர் மு. வ.
வாழ்த்துகின்றார்கள்......
எழுதுகோலிலிருந்து......

§ கட்டுரை:-
பண்டிதர் க. வீரகத்தி
ஆ. துரைரெத்தினம்

§ கவிதை:-
தான்தோன்றிக் கவிராயர்
நிரம்பவழகியான்
மஹாகவி
கல்வயல் வே. குமாரசாமி
மக்கள் கவிமணி
ச. வே. பஞ்சாட்சரம்
கவிதைக்கொத்து

§ சிறுகதை:-
போர்வையூர். ஜிப்ரி
நெல்லை க. பேரன்
கே. டானியல்

§ தொடர் நாவல்:-
செ. யோகநாதன்
ந. பாலேஸ்வரி

§ குட்டிக்கதை:-
இணுவை வசந்தன்



வெளியீடு:
இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை,
இலங்கை.

எல்லாவிதமான **றேடியோக்கள்**
**அம்பிளிபயர்கள்**
**ரேப் றெக்கோடர்கள் மற்றும்**

மின்சார உபகரணங்களை மிகத திறமையாக
உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக்கொள்வதற்கும்,



வால்வ் பற்றறி றேடியோக்களை
ட்ரான்சிஸ்டர்களாக
மாற்றுவதற்கும்,
**ஞாபகத்தில் வைத்திருங்கள்**
போன்: **26160**

**"றெலிறேட்" எலெக்ட்ரோனிக்ஸ்,**
**ஓரியண்டல் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ்.**

*Oriental Musical Stores*

131, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு-11

# வாழ்த்துரை

**மு. வரதராசன்**
தமிழ்ப்பேராசிரியர்

செனாய் நகர்,
சென்னை-30.
31-8-70.

அன்புடையீர்.

"கற்பகம்" வளர்க. தமிழ் உள்ளங்களுக்கு வேண்டிய கலை இலக்கிய அறிவியல் விருந்துகளை அளித்து மகிழ்விப்பதாக.

இளைய எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை வாழ்க.

அன்புள்ள,
மு. வரதராசன்

## வாழ்த்துரை

# ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் வாழ்த்துகின்றார்கள்

★ தரமான சஞ்சிகைகள் நாட்டுக்குத் தேவை. அவை தக்க அடிப்படையில் நிறுவப்பட வேண்டும். ஆர்வம் மாத்திரம் போதிய மூலபலம் அன்று. எனினும் தங்கள் முயற்சி பயன்படுவதாக அமைய விழைகின்றேன்

... கலாநிதி க. கைலாசபதி

★ தங்களைப் போன்ற இளைஞர்களின் உற்சாகமும், உழைப்பும்தான் தமிழ்க் கலை, இலக்கியங்களுக்குப் புதிய பொலிவும் வலிவும் ஊட்டிச் செழுமை தர வேண்டும். தங்கள் ''கற்பகம்'' அதற்குக் காலாய் அமையட்டும்.

... சில்லையூர் செல்வராசன்

★ இன்றைய சூழ்நிலையில், ஈழத்து இலக்கியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தவிர்க்க முடியாத அவசியம் ஏற்பட்டுள்ளதென்பதை நீங்கள் நன்குணர்ந்துள்ளீர்கள். ஆனல், இந்த உணர்வு நிலைத்திருப்பதற்கான மனத்துணிவுடன் நீங்கள் செயற்படுவது அவசியம். என்னுடைய மனப்பூர்வமான ஆதரவை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் முயற்சிகளுக்கு எனது வாழ்த்துக்கள்.

... கே. டானியல்

★ ''கற்பகம்'' வெளியீடுபற்றி அறிவதில் மகிழ்ச்சி. ஆயினும் தொடர்ந்து வெளியிட வேண்டுமென்பதே என் வேணவா. கற்பகத்தின் வளர்ச்சிக்கு என் பூரண ஆதரவு உண்டு.

... ந. பாலேஸ்வரி

★ இந்தியச் சஞ்சிகைகள் தடை செய்யப்பட வேண்டும், தடை செய்யக் கூடாது என்று வாதப் பிரதிவாதங்கள் நடக்கும் இச் சந்தர்ப்பத்தில் ''கற்பகம்'' வெளிவருவது வரவேற்கத் தக்கது 'கற்பகம்' மக்கள் மத்தியில் உறுதியாகக் காலூன்றி நின்று, மக்களிடம் கற்று, கற்றதைப் பட்டை தீட்டி மக்களுக்குத் திருப்பிக் கொடுத்து, மக்களுக்கு மனப்பூர்வமாகச் சேவை செய்யுமென்று எதிர்பார்க்கின்றோம். கற்பகத்தின் வளர்ச்சிக்கு நானும் எமது நண்பர்களும் உதவி செய்வதற்கு எம்மாலானவரை முயல்வோம்.

... நீர்வை பொன்னையன்

★ உங்கள் பணி வெற்றிபெற, தொடர்ந்தும் வெற்றிபெற மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்

... ச. வே. பஞ்சாட்சரம்

## கவிதை வாழ்த்து

# முப் பரிமாணம் கொள்க முகையவிழ் ஏடு!

சொற் றிறம்பாமை கற்பு;

சுடர் தரும் படிப்பும் கற்பு;

தற் கொளும் கொள்கை பேணும்

சால்புமே கற்பு; இம் மூன்று

கற்பையும் அகத்தேற் றேம்பிக்

காக்கும் ஓர் ஏடாய் வாய்ந்து

''கற்பகம்'' பருமம் மூன்றின்

கன வடிவுறுக! வாழ்க!

■ நான்தோன்றிக் கவிராயர்

# ஏழுதுகோலிலிருந்து.....!

தமிழகத்திலிருந்து வருகின்ற இலக்கியங்கள் அனைத்தும் குப்பைகள்; அவைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற குரலும், ஈழத்தில் என்ன தமிழ் இலக்கியமுள்ளது; இங்குள்ளோரால் சிறந்த இலக்கியங்கள் படைக்க முடியுமா? — என்ற குரலும் கேட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே......... ! - "கற்பகம்" வீறுநடையுடன் உங்களை நோக்கி வருகின்றாள். தமிழகத்திலிருந்தென்ன, ஈழத்திலிருந்தும் வெளிவருகின்ற குப்பைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்; குப்பைகள் எங்கிருந்து வந்தாலும் நிறுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இவற்றைச் சட்டத்தின் மூலம் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்ற கருத்துக்கள் ஒருபுறமிருக்க, தரமான இலக்கியங்களையே ஆதரித்து - அவற்றையே விரும்பிப் படிக்க வேண்டும் என்ற உணர்ச்சியினை ஏற்படுத்திக் கொண்டால்தான், நாம் உண்மையான இலக்கியங்களை வளர்க்க வித்திட்டவர்களாவோம்.

ஈழத்திலே பல சிறந்த தமிழிலக்கிய கர்த்தாக்கள் இருக்கின்றார்கள். ஆனால், போதியளவு வாய்ப்பும், வசதியுமற்ற சூழலிலே அவர்கள் மறைந்து வாழ்கின்றார்கள் — இல்லை, மறைக்கப்பட்டுள்ளார்கள். வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்கள் · நாளைய எழுத்துலகின் சிற்பிகள் பலர், இலைமறை காயாக இருக்கின்ற அதே நேரத்தில், சிறந்த பல படைப்புக்களை — காலத்தை வென்று நிற்கக் கூடிய அறிவாக்கங்களை உருவாக்கக் கூடியோர் குடத்துள் இட்ட விளக்காக மறைந்து வாழ்கின்றார்கள். இந்நிலை மாறவேண்டும் - மாற்றப்பட வேண்டும். இதற்காகவே கற்பகம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள விரும்புகிறாள்.

இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவையின் முதற் குழந்தையாகிய "கற்பகம்", ஈழத்தில் வாழுகின்ற தமிழ்ப்பேசும் மக்களின் கலை, பண்பாட்டுக்கு மாறுபடா வண்ணம், சேவையை ஆற்றப் புறப்பட்டுவிட்டாள். ஈழத்தின் தமிழிலக்கிய கர்த்தாக்களிடமும், வாசகப் பெருமக்களிடமுமே 'கற்பகத்'தை வளர்க்கும் பொறுப்பினை நாம் ஒப்படைக்கின்றோம். உங்கள் ஒவ்வொருவரினதும் உற்சாகமும், ஊக்கமுமே கற்பகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை.

ஈழத்தில் தோன்றிய பல தமிழிலக்கிய ஏடுகள் வாழமுடியாது வாடிவிட்டன. அந்நிலை கற்பகத்திற்கு ஏற்பட முடியாது. எமது பங்கினை நாம் ஆற்றும் அதே வேளையில் உங்கள் பங்கும் அதற்கு வேண்டுமென்பதை நினைவூட்ட விரும்புகிறோம். கற்பகத்தினைச் சரிவரப் பயன்படுத்தி, அதன் எழுச்சிக்கும், நீண்ட நல்வாழ்விற்கும் வித்திட்டு, ஈழத்தின் தமிழ் இலக்கியத்திற்கு உங்கள் தொண்டினை ஆற்ற முன் வாருங்கள். ஏற்றம் தாருங்கள்.

— ஆசிரியர் குழு

கட்டுரை



இலக்கியம்

# ஈழத்து இலக்கிய வளர்ச்சி

— பண்டிதர் க. வீரகத்தி

### புகுமுகம்

ஈழம் படைத்த இலக்கியத்தின் பரப்பு, தரம் என்பவற்றின் வளர்ச்சியைக் காய்தல், உவத்தல் அகற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதற்கு முன் இலக்கிய நோக்கு என்ன? எந்த நோக்கு இலக்கிய ஆத்மாவைச் சிரஞ்சீவியாக வைத்துக் கொண்டிருக்கும் என அறிந்திடல் வேண்டும்.

**பரஸ்பர-நுகர்ச்சி**

பெண் வீட்டிற் சமைத்துக்கொண்டே இருப்பவள்; ஆண் சாப்பிட்டுக் கொண்டே இருப்பவன் என்ற மனப்பாங்கில் ஈழத்து இலக்கிய நிலை இல்லை. இது மகிழ்ச்சியும், பூரிப்பும் தருவதாகும். இதனைப் புரிந்து கொள்வது எதிர்கால வளர்ச்சிக்கு ஊட்டம் அளிப்பதாக முடியும். தமிழகமும் ஆக்கிக் கொண்டே இருக்கிறது; ஈழமும் சமைத்துக் கொண்டே வருகிறது. தம் படைப்புடன் மற்றவர் படையலையும் இவ்விரு நில மக்களும் பரஸ்பரம் உண்கின்றனர்; சுவைத்திடுகின்றனர்; உள் நிறைவும் எய்திடுகின்றனர். சில காலங்களில் ஈழப் பெண்ணின் படைப்பு தமிழக மங்கையின் படைப்பிலும் பார்க்கச் சுவை கூடியும் உள்ளது. இன்னும் சிலகாலங்களில் ஈழப்பெண் புதுமுறைச் சமையல்களையும் செய்துகாட்டி, தமிழகத் தையலை வழி நடத்தியும் உள்ளாள். தமிழை வளர்த்த பங்கு ஈழத்துக்கும் உண்டு என்றளவில் நின்று,

**இலக்கிய-நோக்கு**

ஒரு செயலுக்கு நோக்கம் அச்செயலின் முடிவில்பயன் எனப்பேசப்படுகிறது. அஃதாவது நோக்கமும் பயனும் ஒன்றாகும். கடந்த காலத்தினர் இலக்கியப் படிப்பாற் பெற்ற பயனை வைத்து நோக்கத்தைக் கூறிவிடலாம்; அண்மையில் வெளிவந்த பாடலொன்று இலக்கிய நோக்கு எதுவென இனிக்க இனிக்கக் கூறுகின்றது.

"கருத்துக் குவிக்கின்ற சாதனம்
அன்றே யிலக்கியந்தான்
குருத்துச் சுவைகளிற் கூம்பிய
ஆவி குருத்தெறிந்து
தளிர்த்து நுகர்ச்சியில் தன்நிறை
வெய்திச் சுகப்பெறுவில்
அறத்தைக் களிப்ப வருந்துணை
யாவ திலக்கியமே."

.. ஈழநாடு (18-3-69)

இப்பாடல் நம்முன்னோர்களும் நாமும் ஒருமித்து ஏற்றுக்கொண்டுள்ள இலக்கிய நோக்கு எதுவென எடுத்துஇயம்பிடும். ஊண், உடை, இருப்பிடம், ஏனைய புறப்பொருள் நுகர்ச்சிகளால் ஆன்மா தன்னிறைவு எய்துவதில்லை. ஆன்மாவின் குரலாகிய இலக்கியமே ஆன்மாவிற்குத் தன்னிறைவும் தருவதாகும். இத் தன்னிறைவு இல்லையேல் மக்களுக்கும் மாக்களுக்கும் வேறுபாடிருத்தல் முடியாது. எல்லாம் அஃறிணை. எனவே இந்த நோக்கில் அல்லது பயனில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியை ஓரளவு பார்ப்போம். இப்பார்வை விலை குறிக்கப்படாத புத்தகப் பட்டியலாக அதுவும் ஒற்றைக்கண் அல்லது ஓரக்கண் பார்வையாக நிச்சயம் இருக்காது, இருக்கவும் கூடாது.

**மரபும்-திருப்புமுனையும்**

மரபு இலக்கியங்கள், திருப்புமுனை இலக்கியங்கள் என இருவகைப்பட்ட இலக்கிய ஆக்கம் உண்டு. ஒரறிஞர் குறிப்பிட்ட நியதிகளை ஏற்றுக்கொண்டு, ஒருவகை இலக்கியத்தைப் படைக்கின்றார். பின் வருவோர் அவ்வமைப்பைக் கண்ணை மூடியபடியே ஏற்றுக்கொண்டு இலக்கியம் படைக்கின்றார்கள். இம்முறையில் எழுவன மரபு இலக்கியங்கள் எனப்படும். இலக்கியம் இலக்கியத்திற்காக என்ற உணர்ச்சி பெரும்பாலும் இங்கு இழையோடக்காணலாம். ஒருவர் பொது இலக்கியம் படைக்கின்றார். அவரை அடுத்து வருவோர் அனைவரும் அந்த மாதிரியே தம் சிருட்டிப்புக்களை முடிக்கின்ற செயலும் பிழைப்பாடு கொண்டதன்று. இனி, முன்னோர் சென்ற வழியே செல்லாமல் இலக்கிய உருவமும் உள்ளடக்கமும் உத்தியும் (சொல்லும் முறை) வேறுவேறாகக் கொண்டு இலக்கியத் தோற்றம் நிகழ்தலுமுண்டு. இவ்வகையின திருப்புமுனை இலக்கியங்களெனும் பெருந்திருவை எய்திவிடுகின்றன. இவ்விரு வகை இலக்கியங்களையும் செய்யுள், உரைநடை என்ற இருபெரும் தலைப்புக்களின் கீழ் இனிப் பார்ப்போம்.

### (அ) செய்யுள் இலக்கியங்கள்

**சங்க-இலக்கியம்**

சங்க காலம் இனித் திரும்பி வராத, வரமுடியாத பொற்காலம் எனப் பெருமைப்படுவதில் நமக்கு நிகர் நாமே. எதுவாயினும் சங்ககால இலக்கியச் சோலையில் ஈழத்துக் கவிதை மலர்களும் உண்டு. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகை நூல்களில் ஈழத்துப் பூதந்தேவனார் பாடியவை என ஏழு பாடல்கள் உண்டு. இவை பாலை, குறிஞ்சித் திணையைச் சேர்ந்தன. ஈழத்துப் பூதந்தேவனார், ஈழத்தவர்தான் என நாம் எண்ணும் வரைக்கும் சங்க இலக்கியப் பங்கு ஈழத்துக்கும் உண்டு. ஈழத்து என்ற அடையொன்றினாலேதான் இப்புலவர் இலங்கைப் புலவராகிறார். தமிழகத்திற் பிறந்த ஒருவரும் ஈழத்தில் குறிப்பிட்டகாலம் வசிப்பதால் ஈழத்துப் பூதந்தேவனார் எனவும் அழைக்கப்படலாம், இலண்டன் கந்தையா, சிங்கப்பூர் வல்லிபுரம் என்பதுபோல. இருந்தாலும் இவ் ஏழு பாடல்களும் ஏனைய சங்கப்பாடல்கள் சிலவற்றின் தரத்துக்கு இல்லாவிடினும் பலவற்றின் தரத்துக்குக் குறைந்தனவல்ல. ஏழில் ஐந்தும் பாலைத் திணைப் பாடல்களாகக் காணப்படுகின்றமையினால் பிரிவு நிகழ்ச்சியால் இப்புலவர் உள்ளம் அதிகம் தாக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதோ ஒருவகையில் இப்புலவர் பிரிவுக்குள்ளாகியவர் என ஊகிக்கப்படலாம். இந்த ஊகம் இவரைத் தமிழகப் புலவராக்கவுங்கூடும். ஈழத்துப் பூதந்தேவனாருக்குப்பின் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம் வரை ஈழத்து இலக்கியத்தில் ஒருபெரு வெட்டை காணப்பட்டதன் காரணத்தைப் புரிந்துகொள்வது அத்துணை இலகுவானதன்று. இது ஈழத்தமிழ் மக்களின் ஒரு நிலைப்படாத வாழ்க்கைத் தன்மையைக் காட்டுவதாகலாம். அல்லது ஈழத்துப் பூதந்தேவனார் இலண்டன் கந்தையாவும் ஆகலாம். நமது இலக்கியத் தோற்றக் காலத்தைப் பின்வடிப்பதால் நமக்கு அவமானமும் ஏற்படாது. நேற்றுத் தொடங்கியதானாலும் தரமுள்ளதாயின் அது பெருமைக்குரியதே.

**ஏற்றம் படைத்த இலக்கியம்**

ஈழத்தில் தமிழர்க்கென நிலையான அரசு ஏற்பட்டதன் பிற்பாடே சிறப்பாக இலக்கியச் சிரசுதயம் நிகழ்ந்தது எனலாம். இவ் ஆரியச் சக்கரவர்த்திகள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்கள் காலத்தில் எழுந்த நூல்கள் இலக்கியமோ, வேறு துறையோ அநேகமாக மொழிபெயர்ப்புக்களாகும். இலக்கியத்துறையில் குறிப்பிடக்கூடிய மொழிபெயர்ப்பு நூல் இலகுவமிசம். காளிதாசனின் இலகுவமிசத்தின் தமிழாக்கம் இது. அரசகேசரி என்னும் புலவர் பெருமகனாற் செய்யப்பட்டது. இது அரியநடை கொண்டது. அரியநடை என்றால் கற்றவர்களுக்கு அருமைப்பாடானநடை, பொதுமக்களுக்கு விளங்குதற்கரிய நடை என்ற இருபொருளும் கொள்ளப்படுதல் வேண்டும். இன்று, பொதுமக்களல்லர், இலக்கியத்துறையில் வில்லங்கமாக மாட்டுப்பட்டுக் கொண்டிருக்கும் பலருக்குமே புரியாத நடை. இலகுவமிச இறுகிய நடை காலப்போக்கில் மறைப்புண்ட இலகுவமிசம் உயிர்த்தெழுவதற்கு இன்னும் பலகாலம் தேவைப்படும் போலும். தேசிய இலக்கியம் வேண்டும், வேண்டும் என்று கூப்பாடு போடுகின்றவர்களுக்கு, திருக்கரசைப்புராணம், கண்ணகி வழக்குரை காவியம், கதிரைமலைப்பள்ளு என்கின்ற இக்கால இலக்கியங்கள் வியப்புத் தந்தால் அதில் வியப்பில்லை. ''யாழ்ப்பாணத்துத் தமிழ் வேந்தர் காலத்தெழுந்த நூல்களுட் திருக்கரசைப் புராணம், கண்ணகி வழக்குரை காவியம், கதிரைமலைப் பள்ளு ஆகிய மூன்றும் ஈழவள நாட்டிற்கே சிறப்பாகவுரிய பண்புகள் பலவற்றைக் கொண்டு மிளிருகின்றன''- எனக்

குறிப்பிடுகின்றது ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.¶ இனி இரகுவமிசம், கண்ணகி வழக்குரை காவியம், திருக்கரசைப் புராணம் ஆதியன மரபு இலக்கியங்களாக அமைய, கதிரைமலைப் பள்ளு திருப்புமுனை இலக்கியமாக புதுவது புனைதலாக அமைந்துவிட்டது ஈழத்திற்குத் தனிமதிப்பிற்குரியதாகும்.

**புதுவது புனைந்த புகழ்**

தமிழக அறிஞர்கள் பெரும்பாலோரின் ஒரு பொதுவான குணம் ஏதாவது ஒன்று புதுக்க ஆரம்பித்துவிட்டால் அதனைத் தமது நாட்டுக்கே உரிமையாக்கிவிடுவது; அல்லது அப்புதுமையை இருட்டடிப்புச் செய்து விடுவது. மறைக்கப்படும் தன்மையும், மறுக்கப்படும் தன்மையும் அற்றது உண்மை. எனவே நாம் வியாகுலம் எய்த வேண்டியதில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் பொதுமக்கள் இலக்கிய என ஒன்று முதன்முதற் றோன்றிற்றென்றால் அது கதிரைமலைப் பள்ளேயாகும். பொதுமக்களின் அன்றாட ஆசா பாசங்களை அப்படியே சித்தரித்துக் கூறுவது பள்ளு இலக்கியமாகும். கதிரைமலைப் பள்ளின் நாதம் தமிழகத்தை எட்டிய பிற்பாடே, அங்கு முக்கூடற்பள்ளு எழுந்தது. உண்மை இதுவாக, முக்கூடற்பள்ளின் பதிப்பாசிரியரான அறிஞர் மு. அருணாசலம் "முக்கூடற் பள்ளை முன்மாதிரியாக வைத்தே பிறபள்ளுகள் அனைத்தும் அமைந்தன; இக்கூற்றுக்குச் சிறிதளவு விலக்கானவை திருவாரூர்ப் பள்ளும் குருகூர்ப்பள்ளுமே"‡ எனத் தம்பதிப்புரையிற் கட்டுரைத்துள்ளார். அறிஞர் மு. அருணாசலத்துடன் தனதாக்கல் முயற்சி நின்றுவிடவில்லை. "முக்கூடற் பள்ளைப் பின்பற்றிப் பல பள்ளு நாடகங்கள் தமிழ் மொழியில் இயற்றப்பட்டுள்ளன" எனக்கூறி, குருகூர்ப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, செண்பக இராமன் பள்ளு, என்பவற்றை அவற்றுக்கு உதாரணங்களாகக் குறிப்பிட்டுள்ளார்° - கலாநிதி ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். சிறந்த ஆராய்ச்சி அறிஞராகிய கலாநிதி ஒருவர் இப்படிக் குறிப்பிட்டது தான் வேதனைக்குரியது. எவராற் கூறப்படினும் இக்கருத்து, கதிரைமலைப்பள்ளு (இசை நாடகம்) ஆராய்ச்சி முன்னுரையில் நன்கு மறுக்கப்பட்டு, கதிரைமலைப்பள்ளுத்தான் பள்ளுகள் அனைத்துக்கும் தாயகம் என நிறுவப்பட்டும் உள்ளது ‡

நவயுகக்கவி பாரதியினால் பள்ளுப்பாடி ஆடிய பரவசத்தின் தாக்கம் அல்லது உணர்ச்சி கதிரைமலைப்பள்ளில் இருந்தே ஆரம்பமாகியது. இது ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் முதல் முத்தாய்ப்பு ஆகும் அதே பாரதியின் பாடல்களில் சிந்துக்களே அதிகம் சிந்து என்னும் பாவகையையும் முதலில் ஆரம்பித்து வைத்தவர் கதிரைமலைப்பள்ளு ஆசிரியரே. உள்ளடக்கத்திலன்று, கவிதை உருவத்திலும் ஒரு புதுமையைத் தோற்றுவித்தது ஈழம் ஆகும். மரபு இலக்கியங்களைப் படைத்துக் குவிப்பதிலும் பார்க்கப் புதுவது புனைதலே இலக்கியத் தரத்தை மலைவிளக்கு ஆக்கும். தேசியப் பண்பாடு பெருமளவில் வெளிப்பட்டது கதிரைமலைப் பள்ளிலேதான். எக் கண்ணோட்டத்தில் நோக்கினும் அதற்கு விருந்திடுகின்றது கதிரைமலைப்பள்ளு "ஒன்றமையாதோ கரிக்கன்று ஒது."

**ஐரோப்பியர்-காலம்**

**(அ) வளர்ச்சி விழுக்காடு**

போர்த்துக்கேயர் வருகையுடன் யாழ்ப்பாணத் தமிழரசும் ஓய்வு கண்டது. அதனால் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் திடீர் விழுக்காடு ஏற்பட்டது. என்றாலும் கவிதை பிறக்காமல் இல்லை. ஞானப் பள்ளுப் பிறந்தது. பேதுரு, தொம்பிலிப்பு என்பவர்கள் கவிதைபாடிப் பழகினர். ஞானப்பள்ளிக்கூட ஞானப் பள்ளில் தேசியம் மறைந்தது. "ரோமானுபுரி நாடெங்கள் நாடே," "செருசலைத் திரு நாடெங்கள் நாடே"‖ என்றுதான் ஞானப்பள்ளு முழங்கியது. இதற்கு முன்பெழுந்த கதிரைமலைப்பள்ளோ "மாவலி கங்கைநா டெங்கள் நாடே"¶

¶ இலங்கைச் சாகித்திய மண்டல வெளியீடு 1966 பக். 11

‡ முக்கூடற்பள்ளு இரண்டாம் பதிப்பு - மு. அருணாசலம் 1949 பக்:43

° தமிழ்க் கவிதைக் களஞ்சியம் தொகுப்பாசிரியர் ரா. பி சேதுப்பிள்ளை புதுடில்லி சாகித்திய அக்கடெமி வெளியீடு 1960 பக்:XIV

கதிரைமலைப்பள்ளு - க. வீரகத்தி, வாணி கலைக் கழக வெளியீடு 1962 பக்:10.

ஈழத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டல வெளியீடு 1966 பக்:5

¶ கதிரைமலைப்பள்ளு, வ. குமாரசாமி பதிப்பு, பவ-சித்திரை பக்:5

## றிக்ஷா வண்டி தோன்றிய கதை

ஜோனதன் கோபிள் என்ற அமெரிக்கப் பாதிரியார்தான் முதன் முதலாக றிக்ஷா வண்டி தோன்றுவதற்குக் காரணமாயிருந்தாராம். வியாதியுற்ற தனது மனைவியை அடிக்கடி வெளியே ஏற்றிச் செல்ல சொற்ப செலவில் செய்யக் கூடிய ஒரு இரட்டைச் சக்கர வண்டியை ஒரு ஜப்பானிய தச்சனைக் கொண்டு அவர் செய்வித்தாராம். அதை இழுத்துச் செல்ல ஒரு கூலி நியமித்துக் கொண்டாராம் ஜப்பானில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிருந்தபோது மாடு, குதிரைகளுக்குப் பதிலாக மனிதர்களை உபயோகிக்கலாம் என்று அவர் அறிமுகப்படுத்தியதன் பேரில் 1871ம் ஆண்டு ஜப்பானில் றிக்ஷா வண்டிகள் செய்யப்பட்டு அரசாங்கத்தின் கீழ் இந்தப் போக்குவரத்துச் சாதனம் அமுலிலிருந்ததாம். ஜப்பானிய அரசாங்கத்திற்கு "றிக்ஷா வண்டி யோசனை"யைக் கொடுத்தவரும் ஜோனதன் கோபிள் பாதிரியாரே தானாம்.

என மார்பு தட்டியதை மனதில் நினைத்துக் கொள்வோம். மாவலி கங்கைநாடு எங்கள் நாடு என்று கூறிய பிற்பாடுதான் பாரதநாட்டைப்பற்றியும் கதிரைமலைப் பள்ளு குறிப்பிடுகின்றது. இவ்வைப்பு முறை நிச்சயமாகத் தேசியத் திருவற்றோர்க்குத் தெளிவை ஏற்படுத்தியே தீரும்.

**(ஆ) மீண்டும் துளிர்**

போர்த்துக்கீசருக்குப் பின் ஒல்லாந்தர் காலத்தில் கருகிய மொட்டு மீண்டும் மலரத் தொடங்கியது. வரகவி நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் தேசிய இலக்கியக் கொடியை மீண்டும் ஏற்றிவைத்தனர். அவர் பாடிய கரவை வேலன் கோவை, கோவை யுலகின் அற்புத வார்ப்பு ஆகியது. கோவைச் செய்யுள்களில் ஆங்காங்கே தேசிய நோக்கும் யதார்த்தமும் பளிச்சிட்டன. திருக்கோவையாருக்குப்பின் அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டிய நூல் கரவை வேலன் கோவையாயிற்று. கோவைதவிர பறாளை விநாயகர் பள்ளுப் பாடினார் சின்னத்தம்பிப் புலவர். மறைசையந்தாதியும், கல்வளையந்தாதியும் பாடினார். அந்தாதிகள் அந்தமின்றி ஈழத்திலும் எழுந்தன. செய்யுளில் வாளபிமன் நாடகம் கணபதி ஐயர் என்பவரால் முதன்முதலாக எழுதப்பட்டது.

**(இ) இலக்கியச் செழிப்பு**

அடிமையாட்சி ஆயினும் ஆங்கிலராட்சி தமிழ் வளர்ச்சிக்கு அதிவாய்ப்பாக முடிந்தது. பெரும்பான்மையும் தமிழக மரபையொட்டி இலக்கியங்கள் எழுந்தனவாயினும் புதுமையும் பிறந்தது. இயற்றமிழ் இலக்கியங்கள் அல்ல, நாடக நூல்களும் எழுந்தன. நாவலரின் அருமைத் தந்தையாராகிய கந்தப்பிள்ளை இருபத்தொரு நாடகங்கள் எழுதினாரென்பர். அவற்றில் இராம விலாசமும், கண்டி நாடகமும் இணையற்றனவாம். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும் தண்ணீர் போலப் பாடப்பட்ட காலம் இதுவாகும். இக்காலத்தில் எழுந்த செய்யுள் இலக்கியங்களில் காலத்தைக் கடந்து நிற்கக் கூடியன பல உண்டு. அவற்றில் எல்லாம் புதுமையில் இயன்றது புலவர் சுப்பையனார் பாடிய கனகிபுராணம் ஆகும்.

**(ஈ) சிறு காவியத் தோற்றம்**

சிலப்பதிகாரத்திற்குப் பின்பு சாதாரண பொது மக்களில் ஒருவரைத் தலைவராகக் கொண்டு எழுந்த சிறுகாவியம் கனகிபுராணமே. பொதுமக்களிலும் கனகி ஒரு பொதுமகள். ஒழுக்கத்தில் குழப்படிகாரி. அவளியற்கை இதுவாக, சுப்பையனாரும் ஒரு இயற்கைப்புலவர். தமிழ் கூறுநல்லுலகத்தில் முதன்முதலாக முழுக்கமுழுக்க யதார்த்த இலக்கியமாக அமைந்ததும் கனகிபுராணமே. காவியத்தின் உள்ளடக்கம் மிகமிகப் புதியது. உத்தியும் புதியது. உருவம்தான் பழையது. விருத்தப் பாக்களாலேதான் புராணம் முடிந்தது. கனகியின் வருத்தமுரைக்க, யாருக்கும் வருத்தமில்லாத விருத்தமே பொருத்தம் எனக் கண்டார் போலும் சுப்பையனார். கனகிபுராணத்திற்குப் பின்தான் பாரதியின் பாஞ்சாலி சபதம் பிறந்தது. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா எழுந்தது. பாரதிதாசனின் பலசிறுகாவியங்கள் உதித்தன. பாஞ்சாலியின் சபதம் உள்ளடக்கத்திற் பழையது என்பதை மறந்துவிடலாகாது. சொல்லும் முறையாற் புதியது. பொருத்தமான சூழ்நிலையிற் பாடியதனால் பிரசித்திபெற்றது. நட்டுவச் சுப்பையனாருக்கு ஒத்தூதலும் நாதசுரமில்லை. இதனால் சிறுகாவியங்கள் எழுந்த பெருமையையும் தமிழ்நாடு தனதாக்கிக் கொண்டது. ஆனால் வரலாற்று உண்மை வேறுகதை விளம்புகின்றது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் கனகிபுராணம் ஒரு திருப்புமுனையென அறியாதார் அறியாதாரே.

**(உ) குழந்தை இலக்கியம்**

தமிழ் இலக்கியத்தில் குழந்தைகளுக்கென இலக்கியம் ஆங்கிலேயராட்சிக்குமுன் தமிழ்கூறுநல்லுலகத்தின் எப்பகுதியிலும்சரி ஆக்கப்படவில்லை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆதியவற்றையே குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது பாரதிதான் முதன்முதற் சின்னக்கவிதைகளைப் பாடினான். கவிதை வடிவத்தாற் கொஞ்சு தமிழாயினும் உள்ளடக்கத்தாற் கடுமையாய் இருந்தது. "வர்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானுடர் வேற்றுமையுண்டோ" எனப்பாடினான்தான் பாரதி கருத்தோ குழந்தையின் அனுபவத்திற்கு அப்பாற்பட்டது. "அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை" யென்று பாடினான் தான் பாரதி. கூறிய பொருளோ எடுத்ததெல்லாவற்றுக்கும் அஞ்சும் குழந்தையின்

## உண்மையான வாத்தியார்

பிரம்பில்லாமல் பாடம் சொல்லித்தரும் வாத்தியார் உலகத்தில் ஆதி நாள் முதல் இருந்து வந்திருக்கிறார். அவர் சொல்லித் தருவதற்கு சம்பளம் கிடையாது. நாம் அவரை நாடிப் போகும் பொழுது அவர் தூங்காமல் நமக்காக விழித்துக் கொண்டிருப்பார். அவருடைய தயவு தேவையாக இருக்கும் சமயம் கண் மறைவாக ஒளியும் வழக்கம் இல்லை. அவருக்கு நாம் தப்புச் செய்தாலும் கடிந்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டார். ஒன்றும் தெரியாத சுத்த அசமந்தமாக இருந்தாலும் அவனைப் பார்த்து சிரிப்பதில்லை அவர். இப்பேர்ப்பட்ட தங்கமான வாத்தியாரை எப்படி அலட்சியம் செய்ய முடியும்? வாத்தியார்...... வேறு யாருமில்லை, புத்தகம்.

——ரிச்சாட் டிப்யூரி

அனுபவத்திற்கு அப்பாலுக்கும் அப்பாற்பட்டது. ஆனால் அதே நேரத்தில் தேசியவிநாயகம் பிள்ளையும், நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பெருமகனும் குழந்தையின் அனுபவத்தை ஒட்டிப்பாடிய பாரதியைவிட மேற்குறிப்பிட்ட இருவருமே குழந்தை இலக்கியக் கவிஞர்களானார்கள். வா.வே சு. அவர்கட்குமுன் கதைகள் எழுதப்பட்டனவாயினும் அவை எவ்வாறு சிறுகதையெனவும், நாவல் எனவும் கருதப்படாவோ பாரதியின்மேற் குறிப்பிட்ட பாடல்களும் குழந்தை இலக்கியமெனக் கருதப்படா. கவிமணி, தங்கத்தாத்தா இருவர்களிலும் குழந்தையின் அனுபவத்தையொட்டிக் கவிதை தந்தவர் தங்கத்தாத்தாவேயாவர்· கலிங்கத்துப் பரணி பாடிய ஜயங்கொண்டான் பேய்களைப் பாடியது போலத்தான் சோமசுந்தரப் புலவரும் குழந்தையொடு குழந்தையாய்ப் பாடினார் போலும் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை", "கத்தரித் தோட்டத்து வெருளி" ஊழியையும் கடந்து நிற்கப் போவனவாகும். உண்மையை உள்ளவாறு சொல்வதாக இருந்தால் அது பலருக்குக் கசப்பாக முடியலாம். அதற்காக உண்மையை மறைக்கக் கூடாது. குழந்தை இலக்கியத் துறையிலும் ஈழம் பிறிதொரு முத்தாய்ப்பு வைத்துவிட்டது.

செய்யுள் இலக்கியத்தில் ஈழத்துக் காவியங்கள் மிகக் குறைவானவையே. எண்ணிக்கையிற் குறைந்தனவாயினும் தரத்தில் அவை ஒவ்வொரு மூலைக் கற்களாக அமைந்துவிட்டன. நேற்றெழுந்த 'எழிலி', 'குறும்பா' முதலாயினவும் பரிசோதனைக் களத்தில் இன்னும் தோல்வி காணவில்லை என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

**நாட்டுப் பாடல்கள்**

சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்வு அனுபவங்கள்தாம் நாடோடிப் பாடல்களாக - இலக்கிய நாடோடிகளாக உள்ளன. மட்டக்களப்பு நாடோடிப்பாடற் களஞ்சியமாகும் நெற்களஞ்சியமான கீழ் மாகாணம் நாடோடிப்பாடற் களஞ்சியமாவதில் விந்தையில்லை. ஈழத் தமிழகத்தில் வழங்கிவரும் தாலாட்டுப் பாடல்களும் ஒப்பாரிகளும் படிப்போர் கேட்போருக்குப் பெருமகிழ்வு அளிக்கத் தக்கன என்று குறிப்பிடுவர் "இலங்கையின் இன்பத் தமிழ்||" ஆசிரியர்.

**இக்காலக் கவிதைகள்**

இலங்கை சுதந்திரமடைந்த பிற்பாடு கவிதைத் தொழிலிற் பலர் இறங்கியுள்ளனர். தமிழகத்திலும் பார்க்க ஈழத்திலேதான் கவிதை ஆக்கம் எண்ணிக்கையிற் கூடியுள்ளது. தரத்தைப்பற்றிக் குறிப்பிட்டால் அது கவலைக்கிடமானதாக முடியும். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே தரமான கவிதைகள் தருகின்றார்கள். பரவலாகப் பார்க்கும்பொழுது தமிழகக் கவிதைகள் - விரும்பினாலுஞ்சரி விரும்பாவிட்டாலுஞ்சரி — ஈழக் கவிதைகளிலும் பார்க்கத் தரத்திற் கூடியனவே· கவிதையைப் பொறுத்த வரையில் சூடு சுவையற்ற - நளினமும் நயமுமற்ற - கற்பனையுங் கருத்துமற்ற - சிந்தனையும் சீருமற்ற உருவ உள்ளடக்க, உத்தி நிலைதான் தெரிகின்றது. என்றாலும் எதிர்காலம் இழுமென்னோசையுற்ற விழுமிய கவிதைகளை ஈழத்திற்குத் தருமென்ற நம்பிக்கையே உண்டு·

### (ஆ) உரைநடை இலக்கியம்

உரைநடை இலக்கியக் கூறுகளைப்பற்றிக் கூறுமுன்பு உரைநடை வளர்ச்சியைப் பற்றிச் சிறிது குறிப்பிடுவது அவசியம். ஈழத்தில் முதன்முதல் எழுந்த தமிழ்வசன நூல் கி.பி. 18ம்நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலைதான் எனக் குறிப்பிடல் சாலும்¶ எனக் குறிப்பிடுவர் ம. வே. திருஞானசம்பந்தர். இவ்வசனநடை ஓரளவுக்கு எளிமையானதாயினும் நன்னடை என்று சொல்வதற்கில்லை. ஆனால் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் வசனநடையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். குறியீடுகளைக் கையாண்டு எளிமையும் அழகும் தவழும் அருமைப்பாடாக அமைந்த ஓர் உரைநடையில் நாவலர் வல்லாளரானார். அம், வசனநடையில் கைவந்த வல்லாளரானார்.[] தமிழ் உரைநடை ஆறுமுகநாவலரால் ஒரு வகைத்திருத்தமும் அழகும் பெற்றது" எனக் குறிப்பிடுகின்றார்() பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. உண்மையான மதிப்பீடு இதுவாகும். நாவலரின் வசன வெளியீடுகளால் வாசிக்கும் பழக்கம் மக்களிடையே அதிகம் ஏற்பட்டது. நாவலர் பணியில் நாம் கவனிக்க வேண்டிய நல்லதிருப்பம் இதுவாகும். வசன இலக்கியங்களுக்கு வாய்க்கால் வெட்டிய பெருமையில் அதிகபங்கு ஆறுமுகநாவலருக்கே என்க. இனி, இவ்வாறு

> உலகத்தில் எவ்விதத் தொழில் நடைபெறுவதற்கும் சமூக சேவையே முக்கிய தூண்டுகோலாக இருக்க வேண்டுமேயன்றி, ஒரு சிலருடைய நலனிற்காகவும், அச் சிலருடைய லாபத்தின் தூண்டுகோலாகவும் இருக்கக் கூடாது.
>
> – மார்க்ஸ்

|| இலங்கையில் இன்பத்தமிழ் - க பொ.இரத்தினம், கலைவாணி புத்தக நிலைய வெளியீடு - இரண்டாம் பதிப்பு - 1959 - பக்:94

¶ யாழ்ப்பாண வைபவமாலை - முதலியார் குல. சபாநாதன் பதிப்பு, 1953 அனுபந்தம் பக்;XIV

[] வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் - இலக்கிய வரலாறு

() கலைக்களஞ்சியம் தொகுதி ஒன்று – முதற்பதிப்பு, 1954 பக்:475

வளம்பட்ட வசன நடையில் இன்று ஆக்கம் பெற்றுக்கொண்டிருக்கும் இலக்கியக் கூறுகளின் வளர்ச்சியை மட்டிடுவோம்.

**சிறுகதை இலக்கியம்**

உரைநடை இலக்கிய வளர்ச்சி இன்று சிறுகதை, நாவல் திறனாய்வு, நாடகம், விவரண நூல்களாகப் பெருவளர்ச்சி பெற்று வருகின்றது. சிறுகதைப் படைப்பு சிறப்பாக 1940ஆம் ஆண்டுக்குப் பின்னரே முழு வளர்ச்சியில் மலர்ச்சி கண்டது. சிறுகதையை வாழ்க்கை விமர்சனமாகப் பயன்படுத்தியவர்களில் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன் என்பவர்களைச் சாலை இளந்திரையன் உலகத் தமிழ்மாநாடு விழா மலர்க் கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார்.§ இக் காலத்தில் சிறுகதைத் துறைக்கு நுழையாதவர்கள் அருமை. பலர் சிறுகதையாற் சிறுமையடைகின்றார்கள்., சிலர் பெருமையடைகின்றார்கள். சிறுகதை இலக்கியம் ஈழத்தைப் பொறுத்த வரையில் வெற்றி கண்டுள்ளதென்றே கூறவேண்டும். வாழ்வின் மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து சிறுகதை தருகின்றவர்களில் டொமினிக்ஜீவா, கே. டானியல், ஏ.ரி.பொன்னுத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 20ம் நூற்றாண்டுச் சிறுகதை என்ற கட்டுரையில், சாலை இளந்திரையன் அவர்கள் ஈழச் சிறுகதை எழுத்தாளர்களில், திரு கே. வி. நடராஜனைக் குறிப்பிட்டுச் சொல்வதாவது,‡ "கே.வி.நடராஜனின் யாழ்ப்பாணக் கவிதைகள் என்னும் தொகுதியில் உள்ள 'விடிவு' என்னும் கதை ஒரு முதியவளின் உணர்வோட்டமாக விரிந்து, தற்காலத்திய சமுதாயச் சிந்தனை, செயல்முறை ஆகியவற்றின் அருமையான விமரிசனமாக மலர்ந்துள்ளது." ஈழத்தின் சிறுகதைக்கு நல்ல எதிர்காலமுண்டு.

**நாவல் இலக்கியம்**

ஐந்தாண்டுகளுக்கு முன்னர், "ஈழத்திலே நாவல் இலக்கிய முயற்சிகள் மிகவும் குறைவானது என்பதை நாம் நேர்மையுடன் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்" எனக் கூறினார் திருவாளர் கனக-செந்திநாதன். அன்று அவர் கூறியது இன்றைக்கும் பொருத்தமாக உள்ளது. இளங்கீரன், கசின், கச்சாயில் இரத்தினம் 'பழைய ஏற்பாட்டு'க்குரியவர்கள். 'புதிய ஏற்பாட்'டில் அ.கதிர்காமநாதன் முன்னணி எழுத்தாளராகத் திகழ்கின்றார். இவ்விடத்தில் வைத்தே, ஐரோப்பியரல்லாத தமிழ்பேசும் மக்களில் முதன் முதலாகக் கதை எழுதிய சந்தியாகோ சந்திரலருணம்பிள்ளையை நாம் நன்றியுடன் நோக்கிடல் வேண்டும். கதா சிந்தாமணி என்னும் நூலை 1875ம் ஆண்டில் எழுதி, கதையிலக்கியத்தின் மணியோசையை எழச்செய்தார்.

§20ம் நூற்றாண்டிற் சிறுகதை - சாலை இளந்திரையன் உலகத்தமிழ், மாநாடு விழாமலர், சென்னை 1968 பக்:இ 56.

‡பக்:இ. 58.

||ஈழத்து இலக்கிய வளர்ச்சி - கனக செந்திநாதன், அரசு வெளியீடு முதற்பதிப்பு 1964, பக்:102



**நாடக இலக்கியம்**

நாடகத்துறை வளர்ச்சிக்காக அயராது உழைப்பவர் பலர். தலைசிறந்த நடிகர் எனப் போற்றப்படும் திரு. சொர்ணலிங்கம் நாடக இலக்கிய உலகின் மையமுனையாவர். இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி சு. வித்தியானந்தன் நாடக இலக்கியத்திற்கே தன்னை அர்ப்பணித்துள்ளார். பூதத்தம்பி நாடகமும், வைரமுத்துவின் மயானகாண்டமும் ஈழத்து நாடக இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கன என்றாலும் நாடகத்துறையில் ஈழவர் தழுவலர்களாக இருக்கின்றார்களே அன்றி, சுயசிந்தனைப் படைப்பாளர்களாக இல்லை. இது வருத்தப்பட வேண்டிய காரியம்.

**கட்டுரை இலக்கியம்**

கட்டுரை இலக்கியத் தொடர்பில் ஈழத்தின் தரம் பெருமைப்பட வேண்டியது. சி. இலட்சுமணன் எழுதிய இந்திய தத்துவஞானம் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. சோ. சிவபாதசுந்தரம் தந்த ஒலிபரப்புக் கலை சென்னைப் பரிசு பெற்றது. அவர் எழுதிய இன்னொரு நூலான 'புத்தரடிச் சுவட்டில்' சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது. க. வீரகத்தி எழுதிய 'பரிமேலழகரின் இலக்கண நுண்மைகள்' என்னும் இலக்கண ஆய்வுக்கட்டுரை தமிழகப்பரிசு¶ பெற்றது. ஈழத்துக் கட்டுரை இலக்கிய வளர்ச்சி கண்ணுக்குக் குளிர்ச்சியாகவே உள்ளது.

**இலக்கியத் திறனாய்வு**

இலக்கியத் திறனாய்வில் ஈழம் முன்னணியில் நிற்கின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க. கைலாசபதியின் திறனாய்வுப்பணி ஈடும் எடுப்புமற்றது. அவருக்கு நிகர் அவரே. பல ஆண்டுகளுக்குமுன் ஆனந்த விகடன் நடத்திய விமரிசனப் போட்டியில் ஈழத்தவராகிய பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளையே முதற்பரிசைப் பெற்றார். சமீபத்திற் சென்னை வாசகர் வட்டம் வெளியிட்ட 'அறுசுவை' என்னும் ஆறு குறுநாவலைக் கொண்ட நூலுக்கு விமரிசனம் எழுதி முதற்பரிசைப்‡ பெற்றவர் கலைச்செல்வி ஆசிரியராகிய சிற்பி என்பவரே. இப்படி, கட்டுரையும் திறனாய்வும் ஈழத்திற்கு இடைவிடாமற் பரிசுகளை வாங்கித் தந்துகொண்டே இருக்கின்றன.

**கதம்பம்**

இலக்கிய வரலாற்றிலும், இலக்கணத்திலும் கூட ஈழத்தின் பங்கு சற்றும் குறைவானதன்று. முதன்முதல் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுது, வரலாற்று ஆராய்ச்சிக்கு வழிகோலியவர் ஈழத்துக் கனகசபைப்பிள்ளையே. பிள்ளையின் இப்

¶பரிமேலழகரின் இலக்கண நுண்மைகள் - க. வீரகத்தி, செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 39, பரல் 9, 1965 பக்:432.

‡ஆதாரம் ஈழநாடு 18 6-69

பணியைத் தென்னிந்திய அறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் முழுவதற்கும் உரைவிளக்கம் தந்த கணேசையர் பெருமையை யாரே மறுக்கும் வன்மையுள்ளார்? இன்னும், முதன்முதலாகப் பழம் புதையலை அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் இலங்கையராகிய தாமோதரம்பிள்ளை அவர்களுக்கே உரியதெனக் கலாநிதி ரா. பி, கூறுவர்.¶ முதன்முதல் சொற்பிறப்பியல் அகராதி கண்டவர் நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள். முதன்முதல் கலைக்களஞ்சியமாக அபிதான கோசம் வெளியிட்டவர் யாழ்ப்பாணத்து முத்துத்தம்பிப்பிள்ளை என்பவரே.

தமிழ்மொழியின் ஒவ்வொரு துறைக்கும் அடியெடுத்துக் கொடுத்தவர்கள் ஈழத்தவர்களே என்ற உண்மையை யார் மறைத்தாலும் வரலாறு மறைக்காது. மொத்தத்தில் அன்றும் ஈழத்து இலக்கிய வளர்ச்சி சோடைதட்டவில்லை; இன்றும் இல்லை; இனியும் சோடைதட்ட விடமாட்டோம்.

¶1951ல் யாழ்ப்பாணத்தில் சென்னைத்தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பாக தமிழ்த்திருநாளில் நிகழ்த்திய தலைமையுரை.

✱ உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதற்பரிசாகிய தங்கப் பதக்கத்தைப் பெற்ற கட்டுரை இதுவாகும்.


## ஈழத்துப் படைப்புக்கு ஆதரவளியுங்கள்

## கற்பகம் - சந்தா விபரம்


தனிப் பிரதி - 60 சதம்
6 மாதச் சந்தா ரூபா 1-75 சதம்
1 வருடச் சந்தா ரூபா 3-50 சதம்

இன்றே சந்தா தாரர்களாகச் சேர்ந்து ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவிபுரியுங்கள்.

விபரங்களுக்கு:- ஆசிரியர் குழு,
கற்பகம்,
50, ஆமர்ஸ் அவனியூ,
கொழும்பு-6. - (இலங்கை)


# கொதிப்பு!

கவிதை



பொருளாதாரம்

— நிரம்பவழகியான்

கோடரியை வீசுங்கள்! குலத்தை அழிக்கின்ற
கேடதனால் உங்களுக்கே கேடுபல தேடுகிறீர்
பாடுபட்டு வேர்வையெனும் பாலூற்றி நம்குலத்தை
நாடு சிறக்க நடுகை புரிந்தீரா?

நீர்பாய்ச்சி வேலியிட்டு நிலத்தாயைப் பண்படுத்தி
ஏர்முனையாற் கீறி இதப்படுத்தி விட்டீரா?
ஊர்வரண்டு வற்றி உலர்ந்து மடிபிளந்து
சீர்சிதைந்த வேளையிலும் சிந்தித்துப் பார்த்தீரா?

என்ன துணிச்சலுடன் எம்மினத்திற் கைவைத்தீர்
நன்மை செயா உங்களுக்கு நன்மை விளைத்ததனால்,
தின்னப் பனம்பழமும் தேன்போன்ற கள்ளினையும்
என்நலமே எண்ணுமல் ஈய்ந்த பெருமைக்கா?

ஆறேடா மண்ணில் ஆகாயம் மூச்சடங்க
வீறோ டெழும்மலைகள் விளையாத யாழ்மண்ணில்
நூறுநா றுண்டாய் நுமது குலஞ்செழிக்க
பாறி விழும்வரையும் பலன்உவந்து யாம்தந்தோம்.

கங்குமட்டை, பன்னடை காவோலை கொக்காரை,
தங்கி இருக்கும் குடில்வேய நம்மோலை;
உங்களுக்கே எம்மை உருக்கித் தினமளித்தோம்
கல்குல்போல் வாழ்க்கை கருகிவிட்ட காலையிலும்.....

நாட்டின் பொருள் வளத்தை நம்மால் நிலைநிறுத்த
மாட்டா மடையர்நீர், மண்டையினைப் புத்தகத்திற்
போட்டடித்துப் போட்டடித்துப் பொழுதைக் கழித்ததன்றி
ஏட்டிலும் கொஞ்சம் எழுதிக் களைத்துள்ளீர்.

கற்பகம்போல் மண்மடியிற் கைகொடுக்க நாமுள்ளோம்
அற்புதங்கள் செய்ய அறிவைத் திருப்புங்கள்
வெற்றி நும தாகும் விடிவும் மடிமேவும்
விற்ற பெருமை, புகழுந் திரும்பவரும்.

சீவல்தொழிலோர் சிறுமை படைத்த தொழில்
கேவலம் என்றெண்ணல் மாபெரிய கேவலமாம்.
நாவலிமை மட்டும் மிஞ்சியுள்ள நம்தமிழர்
பாவம் அறிக, பதநீரைப் பாவிக்க.

பதநீரை வெல்லம் பனங்கட்டி ஆக்குவதால்
உதவும் அதுபணத்தை உற்பத்தி மேலோங்கின்
அதனை அயல்நா டனுப்பிச் சிறந்திடலாம்
பதநீரைக் கூட "பாரிஸ்" வரவேற்கும்!

"ஒடியல் மா" ஈது 'ஏ.பீ.' உயிர்ச்சத் தடங்கியது
வடிவாயிப் படி"லேபல்" அடித்தால்ஆர் தான்வாங்கார்,
விடியாத வாழ்வுடையோர் விரும்பும் உணவென்ற
படியான பொய்வார்த்தை பதுங்கி ஒதுங்கிவிடும்.

காலச் சிலந்தி வலைபின்னி ஓடுகின்ற
ஞாலத்தில் எம்இனத்தின் நன்றி உதவிகளை
வேலையொடு நல்ல வருவாய் விருத்தியுறக்
கோலம் புனையுங்கள் கொள்கை உணருங்கள்.

கோடரியை வீசுங்கள் குலத்தை அழிக்கின்ற
கேடதனைக் கைவிட்டு கீழ்மை நிலைபிறழ
நாடும் புதிய நலனை நுகருதற்குப்
பாடு படும்போது பனையைப் பயன்படுத்தும்.

§§

---

உமாவின் கைவண்ணம் அட்டையில்!
நிரம்பவழகியானின் சொல்வண்ணம் கவிதையில்!!

---



# நினைவின் அலைகள்..

சிறுகதை

சமூகம்

போர்வையூர் ஜிப்ரி

"வணக்கம் ஐயா" தேனினும் இனிய குரலில் வணக்கம் தெரிவித்துக்கொண்டு நின்றவளை,

"நீங்கள் தானே தேவமனோகரி விசுவநாதன், உட்காருங்கள்" என்றவாறே தலை நிமிர்ந்து நோக்கினேன்.

அவளும் அதே கணம்தான் என்னை ஏறிட்டுப் பார்த்திருக்க வேண்டும். அவள் முகத்தில் வியப்புக்குறி நிழலாடியது. என் முகத்திலும் தான்.

எனக்கு முன்னால் இருந்த நாற்காலியில் அவள் அமர்ந்தாள். மேசை மேல் இருந்த அவளுடைய விண்ணப்பத்தைக் கூர்ந்து கவனித்தேன்.

அவளேதான். பல வருடங்களுக்கு முன்னால் என்னுடைய உள்ளத்திலே புகுந்து, என்னுடைய இதயத்தைக் கவர்ந்து, பிறகு என்னை ஏமாற்றித் தவிக்க விட்ட அதே 'மனோ' தான் அவள்.

இத்தனை வருடங்களுக்குப்பின்னால் என்னுடைய தயவை வேண்டி என் முன்னால் வந்து நிற்கிறாள்.

* * *

"அப்பா, கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரியில் பொறியியல் துறையில் படிப்பதற்காக நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன் ......" என்னுடைய உற்சாகம் அப்பாவை அசைய வைத்ததாகத் தெரியவில்லை.

"என்னப்பா பேசாமலிருக்கிறீர்கள்"

" ம் ....." அப்பா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

"தம்பி... கொழும்புக்குப் போய்ப் படிக்கிறதாக இருந்தால் மாசம் இருநூறு முன்னூறென்று வேணுமே ...... ...... இப்போ நாங்கள் இருக்கிற நிலையில்......" அவர் வார்த்தையை முடிக்காமல் என்னைப் பார்த்தார்.

"அப்பா நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டியளே"
"சொல்லு தம்பி"

FOR YOUR REQUIREMENTS OF QUALITY GRIT AND SAND FREE SAMBA AND KORA RICE PLEASE INQUIRE US.

M. ABDULALLY
81, OLD MOOR STREET,
COLOMBO 12.

WITH THE BEST COMPLIMENTS OF

THE NEHRU PRESS
282, WOLFENDHAL STREET,
COLOMBO - 13. PHONE: 31588.



"நம்முடைய சங்கரி மாமா கொழும்பில தானே இருக்கிறார், அவருடைய வீட்டில் நான் தங்கி இருந்து படிக்கிறன்......"

சங்கரிமாமா என்னுடைய அம்மாவின் சொந்தத் தம்பி. கொழும்பில் நல்ல வசதியோட இருந்தார். ஊருக்கு வந்தால் எங்களோடுதான் தங்குவார்... அந்தச் சொந்தத்தை அப்பாவுக்கு நினைவு படுத்தினேன்.

"தம்பி சொந்தம், பந்தம் எல்லாம் தூர இருக்கிற வரைக்கும் நல்லாகத்தான் இருக்கும். ஆனால் ஒன்றாக இருந்தால் அது பகையைத்தான் வளர்க்கும்."

அப்பாவின் உபதேசங்கள் என்னை மாற்றவில்லை. எப்படியோ பிடிவாதம் பிடித்து கொழும்புக்கு வந்து விட்டேன்.

வந்ததுக்குப் பிறகுதான் அப்பா சொன்ன சொற்களின் அர்த்தம் எனக்கு விளங்கியது. அப்பா எவ்வளவு அனுபவசாலி என்பதைப் புரிந்துகொண்டேன்.

மாமா, தான் உண்டு, தன்னுடைய வியாபார வேலைகள் உண்டு என்று இருந்துவிடுவார். மாமி அமிர்தத்துக்கோ நான் சம்பளமில்லாத வேலைக்காரன்.

மாமாவுக்கு முன்னால் எல்லாம் மரியாதையோடுதான் பேசுவாள், மாமா வீட்டில் இல்லாத நேரங்களில் அவளுடைய போக்கே வேறு.

மூன்று வருஷங்களுக்குப் பின்னால் கிடைக்கப் போகும் 'பட்டத்'தை நினைத்து மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு பொறுமையுடன் இருந்தேன்.

சங்கரி மாமாவின் ஒரே மகள் மஞ்சரி.

அவளை மாமாவும், மாமியும் 'மஞ்சு' என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள். நானும் ஒரு நாள் ஏதோ நினைவில் அவளை 'மஞ்சு' என்று கூப்பிடப் போய், மாமியிடம் வசை வாங்கிக்கொண்ட கதை வேறு.

வேளைக்கொரு அலங்காரமும், பொழுதுக்கொரு சினிமாப் பாட்டுமாக அவள் என்னுடைய நினைவுகளைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தாள்.

மாமி காணாத நேரத்தில் அவளோடு ஆசையாக ஏதாவது பேச நினைத்துப் போவேன், ஆனால் அவளோ என்னோடு அவசியத்துக்கு மேலாக ஒரு வார்த்தையும் பேச மாட்டாள். அது மாமியால் போதிக்கப்பட்ட கௌரவத்தின் எதிரொலி போலும்.

அவள் என்னைப் பார்த்து ஒரு சின்னப் புன்னகையாவது உதிர்க்க மாட்டாளா? என்று ஏங்குவேன். என்னுடைய ஏக்கம் அந்த மூன்று வருட காலத்திலுமே நிறைவேறவில்லை.

தொழில் நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட பொறியியலாளர் பட்டத்துடன் வெளியேறினேன்.

நான் பரீட்சையில் சித்தியடைந்த செய்தி கேட்டு மாமா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மாமி முகத்தைத் தோளில் இடித்துக்கொண்டாள்.

பட்டத்துடன் பல படி ஏறி இறங்கியும் வேலைதான் கிட்டவில்லை. கடைசியில், ஒரு சின்னக் கம்பனியில் நூற்றிருபது ரூபா சம்பளத்தில் பயிற்சியாளனாகச் சேர்ந்தேன்.

நூற்றிருபது ரூபாயில், வரவையும் செலவையும் சமப்படுத்தும், கொழும்பு 'போடிங்' வாழ்க்கை என்னும் அதிசயப் பயிற்சியில் நான் ஈடுபட்டிருந்த அதே நேரத்தில், பெண்களைப் பெற்ற புண்ணியவான்கள் என்னுடைய அப்பாவை முற்றுகையிட்டுக்கொண்டிருந்தனர், பதவிதான் உயர்ந்தது என்று எண்ணுகின்ற சமுதாயத்தினர்களல்லவா? எப்படி சும்மாயிருப்பார்கள்.

"என்னுடைய மச்சான் சங்கரியினுடைய உதவியால்தான், என்னுடைய மகன் ராமநாதன் இப்படி ஒரு நல்ல நிலையில் இருக்கிறான்...... சங்கரியைக் கேட்காமல் நான் ஒரு முடிவும் செய்யஏலாது" என்று சொல்லி வந்தவர்களையெல்லாம் கலைத்துக் கொண்டிருந்தார் என்னுடைய அப்பா.

தரகர்களின் தொல்லை பொறுக்காமல் ஒருநாள் அப்பா கொழும்புக்குப் புறப்பட்டு வந்துவிட்டார்.

▨ ▨ ▨

"சங்கரி உன்னுடைய உதவியாலதான் உவன் ராமநாதன் படிச்சு முன்னுக்கு வந்திருக்கிறான்...... அவனுக்கு நீ செய்திருக்கிற உதவிகளுக்கு...... அவனையே உன்னுடைய மகளுக்கு செய்து வைக்கலாமென்று யோசிக்கிறேன்........"

மாமாவைப் பார்க்கப்போன அப்பா இப்படித்தான் சொன்னாராம்........., அதற்கு மாமா,

"வல்லிபுரம் இது நான் மட்டும் முடிவு செய்யக்கூடிய விஷயமல்ல, உவள் அமிர்தத்தையும், பெட்டை மனோவையும் ஒரு சொல் கேட்டுப்போட்டு உனக்கு முடிவு சொல்லுறன்" என்றாராம். இதற்கிடையில் மாமி உள்ளுக்கு இருந்து மாமாவைக் கூப்பிட்டு, அப்பா காதுக்குக் கேட்கும்படியாகவே... ..

"உங்களுடைய மச்சான் என்ன நினைச்சுக்கொண்டு இங்க வந்து பெண் கேட்கிறார். ம்... என்னுடைய பெட்டை 'வார்சிட்டி'யில் படிக்கிறாள்... அடுத்த வருஷம் பி. ஏ. பாஸ் பண்ணிடுவாள். அவளுக்குக் குறைஞ்சது ஒரு டொக்டர், அல்லாட்டி இஞ்சினியரைத்தான் செய்து வைப்போம்......அது விட்டுட்டு, மாசம் நூறு ரூபாயில கொல்லன் வேலைசெய்யுற மாப்பிள்ளையா பார்க்கப் போறியள்" என்று இரைந்திருக்கிறாளாம்.
என்னுடைய அப்பாவுக்கு,

அவமானம் ஒரு பக்கம், ஆத்திரம் ஒரு பக்கம் அழாத குறையாக நடந்ததை என்னிடம் சொல்லிவிட்டு அன்றே போய் விட்டார். அதற்குப் பிறகு நானும் சங்கரி மாமாவைப் பார்க்கப் போவதை விட்டுவிட்டேன்.

மனோகரிக்கு, பெரிய இடத்தில் கல்யாணமாகியது. கல்யாணப் படத்தைப் பத்திரிகையில் கண்டேன்.
அதன்பிறகு,

▨ ▨ ▨

இன்றுதான் அவளைக் காண்கிறேன்.

கண நேரத்தில் என்னுடைய மனதில் நிழலாடிய பழைய நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டு அவளை நோக்கினேன்.

அவளுடைய கழுத்திலும், காதிலும் ஜொலித்துக்கொண்டிருந்த நகைகள் எதையும் காணவில்லை. நெற்றியில் குங்குமம் இல்லை. வெறுமை, நீர் வற்றிய குளமாக இருந்த அவளைக் காண என்னுள்ளம் வேதனையடைந்தது.

"அத்தான், நீங்கள் இங்கிலாந்திலிருந்து 'இஞ்சினியர்' பட்டம் பெற்றுத் திரும்பியதைப் பேப்பரில் படித்தேன். ஆனால் இங்கு உங்களைச் சந்திப்பேனென்று நான் எதிர்பார்க்கவில்லை."

"என்னுடைய கதை இருக்கட்டும் உன்னைப்பற்றிச் சொல்லு, மாமாவும் மாமியும் சுகமாக இருக்கிறார்கள்தானே."
அவளுடைய முகம் திடீரென்று மாறியது. உள்ளத்தில் எழுந்த வேதனையை அடக்குவதற்காக உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"அத்தான் உங்களை உதாசீனப் படுத்திவிட்டு ஒரு பணக்கார வழக்கறிஞனைக் கல்யாணம் செய்துகொண்டேன். ஆனால் என்னுடைய கணவர் என்னைவிட மதுப் புட்டியைத்தான் நேசித்தார், ஒரு முறை நாங்களெல்லாரும் குடும்பத்தோடு மலை நாட்டுக்குப் போனோம். வரும் வழியில், மது மயக்கத்தில் என்னுடைய கணவர் காரை விபத்துக்குள்ளாக்கிவிட்டார். அந்த விபத்தில் நான் மட்டும்தான் உயிர் தப்பினேன். வங்கியில் இருக்கும் பணத்தால் ஏதோ மரியாதை

---

**தமிழ்ப் பண்பும் அதன் தனிப் பண்பும்**

"தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச்சென்று எடுத்துவரும். ஆனால், தமிழர்கள் தமக்கு என்று உள்ளதை ஒருநாளும் இழக்க சம்மதிக்க மாட்டார்கள்."

பேரறிஞர் அண்ணா

---

யாக வாழ்க்கை நடத்துகிறேன் அந்தப் பணம் கரைந்து கொண்டே போகின்றது. ஏதாவது தொழில் செய்தால் தான் மானமாகப் பிழைக்கலாம் என்ற நிலையில் இருக்கிறேன்.''

அவளுடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடிக் கொண்டிருந்தது. அவள் கண்களைத் துடைத்துக்கொள்ளும் வரை பொறுமையோடு காத்திருந்தேன்.

"அத்தான் நீங்கள் நினைத்தால் இந்த வேலையை எனக்குத் தரலாம். முன்பு நடந்தவைகளை மறந்துவிட்டு......" அவள் என்னை ஏக்கத்தோடு நோக்கினாள்,

"மன்னித்துவிடு 'மனோ' "அந்தப் பெயரைச் சொல்லும் போதே என்னுடைய நாடித் துடிப்பு இரண்டு மடங்காவதை உணர்ந்தேன் "நான் இங்கு பொறுப்புள்ள ஒரு வேலையில் இருக்கிறேன், இங்கு தகுதியுள்ள ஒருவரைத் தேர்ந்தெடுப்பதுதான் என்னுடைய கடமை. அந்தக் கடமையிலிருந்து தவற முடியாத நிலையில் நான் இருக்கிறேன்.''

# கற்பகத்திற்கு....

கற்பகம் செழித்து ஓங்க எனது நல்வாழ்த்துக்கள் முயற்சி வெல்லட்டும்!

—செ. கதிர்காமநாதன்

கற்பகம் கார்த்திகைத் திங்களில் ஈழநாட்டில் வீர நடை போடுவாள் என எதிர்பார்க்கின்றேன், அழகிய பல சிறந்த கருத்துக்களுடன் வெளிவர வேண்டுமென்பதே என் அவா. கற்பகத்தின் வளர்ச்சிக்கு என் உதவி என்றும் கிட்டும்.

-தமிழ்ச்செல்வி

கற்பகத்தின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். என் ஆதரவும், ஒத்துழைப்பும் கற்பகத்துக்கு என்றும் உண்டு. தங்கள் முயற்சி வெற்றியாகட்டும்.

-செ. கந்தசாமி

"கற்பகம்'' எனும் கன்னித் தமிழேட்டை வெளியிடப் போவதறிந்து மகிழ்வடைந்தேன். தங்கள் முயற்சி செந்தமிழர் தம் இல்லமெலாம் அற்புதம் புரியவேண்டும். கற்பகச் சோலையில் புகுந்துதன் பொலிவை அவ்வேடு நல்கி, துடிப்பிழந்து கிடக்கும் உள்ளங்களைத் தட்டியெழுப்ப வேண்டும். "கற்பகம்'' அற்புதமாய் எழுந்து நற்றமிழ் வளர்க்க வந்ததறிந்து களிப்படைகிறேன். உளமார வாழ்த்துகின்றேன்.

—இராஜம் புஷ்பவனம்



"அப்படியானால்...''

"உன்னைவிடத் தகுதியுள்ள பலபேர் இந்த வேலைக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்.''

அவள் என்னைப் பார்க்காமலே எழுந்து நடந்தாள். எனக்குள் சிரித்துக்கொண்டே, அடுத்த ஆளைக்கூப்பிட அழைப்பு மணியைத் தட்டினேன்.

வீட்டு வாசலிலிருந்த பொத்தானை அழுத்தினேன். மணிச்சத்தம் கேட்டு கதவைத் திறந்த 'மனோ' என்னைக் கண்டதும் மீண்டும் கதவை மூட முயற்சித்தாள்.

அதற்குள் நான் உள்ளே புகுந்து விட்டேன்.

அசிங்கமான ஒரு நோயாளியைப் பார்க்கும் ஒரு "டாக்டரை'ப் போல அவள் என்னைப் பார்த்தாள். அழகு மலரை நோக்கும் ஒரு கலைஞனைப்போல நான் அவளைப் பார்த்தேன்.

"என்னைப் பழிவாங்கிவிட்ட மகிழ்ச்சியில், என்னுடைய வேதனையைப் பார்த்து ரசிக்கலாமென்று வந்தீர்களா" அவள் வார்த்தைகளால் என்னைச் சாடினாள், "போய்விடுங்கள்"

"மனோ, கோபப்படாதே, நான் அப்போது கடமையைச் செய்யும் நோக்கத்துடன் சொன்னதைக் கேட்டுக் கோபித்திருப்பாய்''

"அதற்குச் சமாதானம் செய்து கொள்ள வந்தீர்களாக்கும்," உங்களுடைய அதிகாரத்தின் மமதை உங்களுடைய மனதில் இரக்க உணர்ச்சி கூட இல்லாமல் செய்துவிட்டது."

"மனோ, வீணாக என்னை ஏசாதே. ஒரே ஒரு முறை மனோ என்று உன்னை ஆசையோடு கூப்பிட்டதற்கு, உன்னுடைய அம்மா என்னைத் திட்டிய திட்டுக்களை இன்றும் நான் மறக்கவில்லை. உன்னுடைய ஒரு புன்னகைக்காக காலம் முழுவதும் உன்னுடன் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்று ஆசைப்பட்டவன் நான். ஆனால் அதுவும் கைகூடவில்லை."

"அதற்கான தண்டனையைத் தான் அளித்துவிட்டீர்களே''

"இல்லை மனோ, இல்லை. உனக்குத் தண்டனை அளிக்க எந்த உரிமையும் எனக்கில்லை, நீதான் என்னைத் தண்டிக்கிறாய்."

''என்ன சொல்லுகின்றீர்கள்"

"உன்னுடைய நினைவுகளுடனேயே இன்னும் நான் ஒண்டியாக வாழ்கிறேனே, இன்னுமா உனக்குப் புரியவில்லை''

"அத்தான்"

அவளுடைய கண்களிலே ஒரு ஒளி. என்னுடைய இதயத்தின் தாபத்தைப் புரிந்து கொண்ட ஒளி!

"ஆமாம் மனோ..... நடந்ததையெல்லாம் கனவாக எண்ணிக்கொள்....."

"அத்தான்... நானோ விதவை, எங்களுடைய சமூகம் ...... இதை ஏற்றுக்கொள்ளுமா?"

அவளை என்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டேன் அவள் என்னுடைய மார்பில் முகம் புதைத்தபடி விம்மினாள் எங்கோ ஒரு ரேடியோவில் எழுந்த இசை எங்களுடைய காதுகளுக்குத் தெளிவாகக் கேட்டது.

"மாங்குயிலில் விதவை இல்லை
பூங்கொடியில் விதவை இல்லை
பகுத்தறிவு கொண்ட மாந்தர்
தமதறிவில் விதவையானார்.."

## பயன்படத்தக்க இலக்கியம் நமக்கு ஏது?

உண்மையாகப் பார்ப்போமானால் நமக்கு இலக்கியமே இல்லை, இலக்கியங்கள் என்று பாராட்டத் தகுந்த இலக்கியங்கள் இருக்கின்றன. அவை புலமைத் தன்மையில்தான் இருக்கின்றன. நாம் பின்பற்றத் தகுந்த முறையில், நமக்குப் பயன்படுகிற முறையில் எந்த இலக்கியம் இருக்கிறது.?

—பெரியார் ஈ. வே. ரா.

## சிறுமியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்த ஜனாதிபதி

அன்புசால் தலைவ!

"தங்கள் தோற்றத்தில் ஒரு புதுப்பொலிவு காணவிழைகிறேன். அதன் பொருட்டு தாங்கள் சிறிய அளவில் தாடி வளர்த்துக் கொண்டால், நல்லது என்று எண்ணுகிறேன். தயவு செய்து என் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கோருகிறேன்."

இப்படியான ஒரு கடிதத்தைப் பதினொரு வயது நிரம்பிய "கிரேஸ் பிருடல்" என்னும் சிறுமி ஆப்பிரகாம் லிங்கனுக்கு எழுதி வைத்தாள். கடிதம் கிடைத்து ஒரு மாதத்திற்குள்ளாகவே ஜனாதிபதி சிறுமியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார்.

உண்மையாகவே தாடி வளர்த்துக் கொண்டார்



கவிதை

சமூகம்

# வெறுந்தகரம்

மஹாகவி

உள்ளுடன் அற்ற உருவே என்றும்,
கோள் இலாத கோதே என்றும்
வெறுந் தகரத்தைவீசி விடுகிறார்.
ஆயினும்,
பொதுக் குழாயடியிற் போய்நின் றொருத்தி
பிள்ளையின் பசிக்கு நீர் பிடிக்கக்
கொள்கலம் ஆதலும் காணக்கூடுமே!

—

கற்பகத்தைப் பற்றிய கருத்துக்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அடுத்த இதழிலிருந்து

"உங்கள் விருந்து"

என்ற பகுதியில்
அவை வெளியிடப்படுமென்பதை வாசகப்பெருமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

—ஆசிரியர் குழு.

அன்பளிப்பு

பிரபல அரிசி வியாபாரிகள்

**V. R. M. CO.,**
**No. 111, OLD MOOR STREET**
**COLOMBO - 12.**



## தொடர் நாவல்

# சிறுபொறியும் பெருநெருப்பும்

**1**

செ. யோகநாதன்

அவன், யாருடனும் ஒன்றிரண்டு சொற்களிற்கு மேலாகக் கதைத்ததை அந்தக் கடைத்தெருவில் யாருமே கண்டதில்லை. மௌனமே சொற்களாய் வழியும் அவனது முகத்தில் புன்னகையோ, கவலையோ, எந்த உணர்ச்சியோ கூட ரேகையிட்டதில்லையென்று கடைத்தெருவிலே பேசிக் கொண்டார்கள். ஆனாலும் அவன் அந்தக் கடைத்தெருவுக்கு அறிமுகமாகி நாலைந்து வருடங்கள் கழிந்தோடிப்போய்விட்டன.

கிராமம் என்ற நிலையை மீறிப் பட்டணமாகிவிட்ட, அந்த இடத்திலுள்ள பலராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற, "காமாட்சி விலாஸ்" என்ற பெரிய சாப்பாட்டுக்கடையிலே அவன் சமையற்காரனாகி, அங்கேயேதான் தங்கியிருக்கின்றான். அவனுடைய பூர்வோத்திரம் அங்குள்ள யாருக்குமே தெரியாது. அதைப்பற்றிக் கேட்பதற்கு யாருமே அக்கறைப்பட்டதுமில்லை. அப்படிச் சொல்வதற்கு இவன் யாருடனாவது இதுவரையிலும் மனம் விட்டுப் பழகியதுமில்லை.

காட்டுப்பாதையில் எரிந்து சரிந்திருக்கும் புடைத்த தேக்கமரம் போல அவனது வைரம்பாய்ந்த உடம்பு, வாரப்படாமையினால் எந்நேரமும் அலைந்து பறந்து கொண்டிருக்கும் நீண்ட பரட்டைத்தலைமயிர், விழித்திருக்கின்ற நேரமெல்லாம் கண்கள் நித்திரை கொள்வதுபோல அரைகுறையாகச் சோர்ந்து களைத்திருக்கும். நெஞ்சின் வலது புறமார்பில், கத்தி தாழவெட்டி ஆறிப்போன பெரியதோர் தளும்பு. அவனது இடது கையில் சேறிக்காலைத் தூக்கி நிற்கும் சிங்கத்தின் உருவம் பச்சை குத்தப்பட்டிருந்தது. கால்களை நிலத்தில் அழுந்தி அவன் நடக்கும்போதும், புருவம் அடர்ந்த கூசும் கண்களால் உற்றுப் பார்க்கின்ற வேளையிலும், அவனுக்குப்பக்கத்திலுள்ளவர்களுக்கு ஒதுங்கிப் போகும் அச்சம் தோன்றுவதோடு மட்டுமல்லாது, பயங்கலந்த மரியாதையும். ஒதுக்க மனோபாவமும் நெஞ்சினுள்ளே குடிகொள்ளும்.

அந்தப்பட்டணத்தில் ஒரு உபதபாற்கந்தோர், டி ஆர். ஓ. காரியாலயம், நீதிமன்றம், பொதுவேலைப் பகுதி ஆகியன இருந்தமையினால் அங்கு உத்தியோகம் பார்க்கின்ற குடும்பமே இல்லாத பிரம்மச்சாரிகளுக்கும் மனைவி

குழந்தைகளை ஊரிலே விட்டு விட்டு வந்த குடும்பஸ்தர்களுக்கும் ஏற்ற ஒரு நல்ல கடையாகவும், அவசியமான இடமாகவும் "காமாட்சி விலாஸ்" விளங்கியது. எந்நேரமும் கலகலப்பான வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் "காமாட்சி விலா'சில் இரண்டு சமையற்காரர்களும், நான்கு பரிசாரகர்களும் கடமையாற்றுகின்றனர்.

"காமாட்சி விலா"சின் அதிபர் ஆரோக்கியநாதன், புசல்லாவையில் பெரிய ஹோட்டல் ஒன்றின் உரிமையாளராக இருந்து, வகுப்புக்கலவரங்காரணமாக ஹோட்டல் உடைத்துச் சூறையாக்கப்பட்டதின் பின்பு இங்கு நூறு ரூபாப் பணத்தோடு மட்டுமே வந்து தேனீர்க்கடையொன்றைத் தொடங்கி, தானே தேனீர் போடுபவனும், முதலாளியாயும் நின்று, இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார். "காமாட்சி விலா"சில் இருந்து கூப்பிடு தூரம் தள்ளி அவரது அமெரிக்கன் மொடலில் கட்டப்பட்ட வீடு உள்ளது அந்த வீடு சென்ற ஆண்டு தைமாதத்தின் போதுதான் கட்டி முடிக்கப்பட்டது. அதற்கு ஆரோக்கியநாதன் "காமாட்சி மகால்" என்ற பெயர் சூட்டியிருக்கின்றார்.

அவர் கடை தொடங்கிய ஆறு வருஷ காலத்திற்குள் குறைந்தது நாற்பது பேராவது அவரின் கடையிலே வேலை செய்திருப்பார்கள். பதினெட்டுப் பத்தொன்பது மணித்தியாலங்களுக்குமேல் கடுமையாக வேலை செய்து உழைத்தாலும், அவர் நாலைந்து மாதங்களுக்கு மேல் ஒருவனை வேலைக்கு வைத்திருந்ததில்லை ஏதாவது குருட்டுக் காரணங்களைச் சொல்லி ஒரு சதங்கூடச் சம்பளங்கொடாது பலரை அவர் கடையிலிருந்து விரட்டிக் கலைத்திருக்கின்றார்.

"கனநாளைக்கு ஒரேயிடத்திலை நின்றால் இடம் பிடிபடுகிற தோடை, உரிமைகளும் வேணுமெண்டு இவங்கள் கேட்கத் தொடங்கிவிடுவாங்கள் பாவம் பழியெண்டு வேலை கொடுக்கிறதுமில்லாமல் பிறகு நாங்கள் இவங்களாலை கஷ்டப்படவேண்டி வரும்." என்று தனது கடையிலே வேலை செய்பவர்களைப் பார்த்து அடிக்கடி முணுமுணுத்துக் கொள்வார். ஆனால் அங்குள்ள இரண்டு சமையற்காரரையும் அவர் மிகவும் கவனமாக நடத்தினார். இவையெல்லாம் அவரின் தொழில்ரகசியங்கள்.

/ / /

மழை சோனாவாரியாகப் பெய்து கொண்டிருந்த மாரிகால நாளொன்றின் போது கடைக் கதவுகளைப் பூட்டிக் கொண்டிருக்கையில், கடையின் ஓரக்கதவோடு அந்தக் கறுத்துத் தடித்த உருவத்தை ஆரோக்கியநாதன் கண்ணுற்றார். "யார் அது?" என்ற ஆங்காரக்குரலோடு, லையிற் வெளிச்சத்தை அந்த முகத்தின் மேலே பாய்ச்சிப்பார்த்து, சதைக்குள் மடங்கிய அந்தக் கூசிய கண்களையும், நனைந்து சளியும் பரட்டைத்தலைமயிரையும் கண்டபோது, அவரின் சினம்



மண்ணெண்ணை ஊற்றிய அடுப்பாய்க்குப்பென்றுபற்றியெரிந்து. "யாரடா அது?" என்றது அவரின் அகங்காரக் குரல். அவருக்குக்கோபம் வருகின்றபோது தனக்கேயுரிய முகச்சுழிப்போடு சொற்களை அழுத்திப் பேசுவது தான் அவரின் வழக்கம். அவரின் அந்தக்கேள்விக்கு அவரே எதிர்பாராதவிதமாகப் பதில் வந்தது. "இது உன்ரை கொப்பன் வீட்டுக் காணியில்லை. பேசாமல்க்கதவைப் பூட்டு."

கரகரத்த குரலின் பயங்கரம், அந்தக் குரலிற்குரிய உருவத்தை ஆரோக்கியநாதனின் கண்களில் மானசீகமாகக் . கொண்டுவந்து நிறுத்திற்று. பேசாமல், கதவை உள்ளாகப் பூட்டிக் கொண்டு பின் புறமாக நின்ற சுகுமாரனையும், கந்தையாவையும் வெளியே பாயை விரித்துப் போட்டுக்கொண்டு படுக்கும்படி சொல்லிவிட்டு, அவர்கள் படுத்த பின்பு அங்கிருந்து தமது வீட்டை நோக்கி நடந்தார். நல்ல நிலவு காலம்.

நிலவு, குளிர்ந்ததோர் பிரகாசமான பகலெனப் பெய்துகொண்டிருந்தது. மீன்களைப் பிடிக்க எறியும் நைலோன் வெண்ணிற வலையென ஒரு முகிற் துண்டு நிலவிற்கு மேல் அரை குறைச் சதுரமாய்ச் சொரிந்து ஆடிக் கொண்டிருந்தது; ஆடிக் கொண்டே அசைந்தது.

ஆரோக்கியநாதன் வழமையாக வீட்டிற்குப்போகும்போது ஏதாவது பாட்டை வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு போவது வழக்கம். இன்று மௌனமாக, சுற்று முற்றும் பார்த்தபடி மடியை இறுக்கிக் கொண்டு அவர் வேகமாக நடந்தார்.

ஊர், உறக்கத்தின் மௌனத்தில் ஆழ்ந்துவிடத் தொடங்கிய அவ்வேளையில், எங்கிருந்தோ ஒலி பெருக்கி பாடும் பாடல் காற்றோடு மிதந்து வந்து வெகு துல்லியமாகவே கேட்டது. "மானிட வாழ்வு பெரும் ஆனந்தம்" என்ற எம். கே. தியாகராஜா பாகவதர் பாட்டு. அவருக்கு அப்பாட்டில் மிகவும் விருப்பம். பின்னால் திரும்பிப் பார்த்தார். அவன், அந்தக் கடை வாசலில் கண்ட முரடன் இல்லை. ஒருவருமே கண்ணிக்கு வெகுதூரம் வரை தட்டுப்படவில்லை. ஆரோக்கியநாதன், அந்தப் பாட்டை வெகு திருப்தியுடன் வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டார்.

பொழுது விடிந்து கடைக்கதவைத் திறக்கும்போது கடைக்கு நேரே, வீதியின் எதிராக உள்ள சடைத்து வளர்ந்த ஆலமரத்தினடியில் கவலையேதுமின்றி அந்தக் கறுத்துத் தடித்த உருவம் படுத்துக் கிடந்ததைக் கண்ட பின்னர்தான் ஆரோக்கியநாதனுக்கு மனத்தெம்பு ஏற்பட்டது. அவருக்கு அதிகாலையில் துயிலெழும்போது, மனதினுள்ளே மின்வெட்டுப் போலோர் யோசனை தோன்றியது. எல்லாம் அந்தக் கறுத்துத் தடித்த உருவத்தைச் சுற்றித்தான்.

கடையில் வியாபாரம் பரபரப்பாக நடந்து ஓய்ந்து, கடைப் பையன்கள் அவசர அவசரமாக மத்தியானச் சாப்பாட்டை அள்ளி விழுங்கிக் கொண்டிருக்கும் நேரமான மூன்றரை மணிக்கு வெற்றிலையை நீரில்ப் போட்டுக் கழுவித் தெளித்து அடுக்கிவிட்டு மேசையின் முன்பு வந்த ஆரோக்கியநாதன், தன் எதிரே அந்தக் கறுத்துத்தடித்த உருவம் வந்து நின்றதைக் கண்டார். நேற்றுக் கடை பூட்டும் நேரத்தில் நடந்த சம்பவமும், அதி காலையில் துயிலெழுகையில் தன் மனதில் அந்தக் கறுத்த உருவம்பற்றி எழுந்த நினைவும் அவரின் நெஞ்சினுள்ளே குறுகுறுத்துக்கொண்டு கிடந்தது அந்த உருவமோ அப்படியோர் சம்பவமே நேற்று நடந்ததாய்க் காட்டிக்கொள்ளாது மௌனத்தைக் குலைத்துக்கொண்டு கரகரத்த குரலிற் கேட்டது:

"எனக்கொரு வேலை தர முடியுமா?"

ஆரோக்கியநாதன் அக்குரலையே கேளாதவர் போலக் கண்களை நீண்ட கணக்குக் கொப்பியின் பக்கங்களுள் புதைத்துக்கொண்டு சிக்கலான கணக்கொன்றைக் கூட்டுபவர் போலப் பாவனை செய்து கொண்டிருந்தார்.

'மடையா நான் சொல்வது உன் காதிலே விழவில்லையா' என்ற தோரணையில் மீண்டும் அவன் கேட்டான்:

"எனக்கு ஒரு வேலை தர முடியுமா?"

அந்த நெஞ்சைத் தொடும் கரகரத்த குரலை மீறி அலட்சியம் செய்து தொடர்ந்தும் பாவனை பண்ண முடியவில்லை ஆரோக்கியநாதனால். தன் எதிரே விறைத்த தேக்கமரமென நின்ற அவனைத் தலையிலிருந்து கால் வரை ஏற இறங்கப் பார்த்து விட்டு,

"வேலை ஒன்றும் இங்கையில்லை" என்றார்

அவன் விடுவதாயில்லை.

முகத்தைக் கோணினான்,

"சமையல் வேலை திறமாய்ச் செய்வன்" அவனே சொன்னான்.

ஆரோக்கியநாதன் கண் புருவங்களைச் சுழித்து, மனதினுள்ளே பொங்கிய உற்சாகத்தை வெளிக்காட்டாது, சலித்தவர் போல முக பாவத்தை மாற்றிக்கொண்டார்,

நிமிர்ந்து உட்கார்ந்தபடியே அவர் கேட்டார்:

"முந்தி எங்கையாவது செய்ததுண்டா?"

"ஓம்"

"எங்கையெங்கை"

"கன இடத்திலை".

அவன் பறட்டைத் தலைமயிரை அழுத்தி இடது கையைப் பிடரியில் தேய்த்துக் கொண்டான்

இனிக் கேள்வி கேளாதே என்பது போலப் பதில் வந்தபிறகு ஆரோக்கியநாதன் தொடர்ந்தும் அவனைக் கேள்வி கேட்க விரும்பவில்லை. அவ்வேளையில், உள்ளேயிருந்து வந்த பையன் விசுவலிங்கம் அவரிடம் காய்கறி வாங்கக் காசைக் கேட்டுப்பெற்றுக் கொண்டு அவர்களிருவரையும் அதிசயமாகப் பார்த்துவிட்டுக் கூடையோடு வெளியே போனான்

"சரி, அப்பிடியெண்டால் எவ்வளவு சம்பளம்?"

"சாப்பாட்டோடை ஐம்பது ரூபா"

ஆரோக்கியநாதன் மனதினுள் பிதுங்கிய ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார். எல்லாவற்றையுமே ஏற்கனவே யோசித்து வைத்துப் பதில் சொல்வது போல இந்தத் தடியன் மறுமொழிகள் சொல்கிறானே என்று ஆரோக்கியநாதன் தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டார். எனினும் தன்னைச் சமாளித்தபடியே, அந்த நீண்ட கணக்குப் புத்தகத்தைக் கைகளால் இழுத்து, ஏதோ அவசரக் கணக்குப் பார்ப்பதுபோலப் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு, "நீ கேக்கிறது கூடிப்போச்சு. முப்பது ரூபா தரலாம், வேறை பேச்சில்லை" என்றார் அவன் அவரைக் கூர்ந்து கூசிப்பார்த்து விட்டு இடது கையில் பச்சை குத்தியிருந்த சிங்கத்தைத் தடவி வருடியபடி கனைத்தான்:

"வேறை கதையில்லை. நாற்பது ரூபா தந்தால் சரி"

அவனுடைய பேச்சு, கம்பீரம் முரட்டுத்தனம் ஆகியவை தனது கடையின் பாதுகாப்பிற்கும் தனக்கும் தேவை என்று அவர் நேற்றிரவு முடிவு செய்திருந்தாராகையினால், இந்தத் தொகையோடேயே அவனிடமிருந்து கூடிய உழைப்பினைக் கறக்கலாம் என்ற நம்பிக்கையோடு மனமின்றி ஒப்புதல் சொல்பவர் போல அவர் கேட்டார்.

"என்ன பேர்? என்ன ஆள்?"

ஆள் என்ற சொல்லை வெகுவாய் அழுத்தி ஆரோக்கியநாதன் கேட்ட கேள்விக்கு அவன் மீண்டும் கத்திவெட்டி ஆறிப்போன தழும்பை நெருடியபடி மிடுக்காகச் சொன்னான்:

"பேர் சிங்கம் - வீரசிங்கம் நல்லாள்தான்"

அவனுடைய சாதியை வெகு நாசுக்காக அறிய விரும்பிய அவரின் முகத்தை ஏளனமாகப் பார்த்து அவன் சொன்ன பதிலின் காரத்தை உணர்ந்துகொண்டவர்போல ஆரோக்கியநாதன் கதிரையைப் பின்னே தள்ளி எழுந்து, அவனைப் பின்பக்கமாகக் கூட்டிச் சென்றபோது, பெரிய பிருக்கியின் மூலையிலிருந்த சுவர் மணிக்கூடு ஒன்பது தரம் அடித்து ஓய்ந்தது.

— வளரும்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசாகிய தங்கப் பதக்கத்தைப் பெற்ற கவிதை இதுவாகும்.

**கவிதை**

✱

பரிசு பெற்றது

# புதியதோர் உலகஞ் செய்வோம்!

—கல்வயல் வே. குமாரசாமி—

கற்பனையில் வாழ்ந்திருந்த காலம்போய்
அறிவியலின் அடிச்சு வட்டில்
நிற்கின்றோம்; அற்புதங்கள் நிகழ்த்துகின்றோம்
வெண்ணிலவில் இறங்கி எண்ணம்
முற்றுகின்ற நிலைபலவும் முதிர்ந்து விட்ட
விளிம்பதிலே நின்று வெற்றி
பற்றியெலாம் விளம்புகின்றோம் எழுதுகின்றோம்
எம்நிலையை மறந்தே போனோம்.

இன்பவெறி மீறுவதாற் கூறுவன
மறந்தாலும் இதயத் தோப்பில்
நின்றுலவி வந்தோமேல் நிச்சயமாய்
நாமெல்லாம் எங்கள் வாழ்வில்
இன்றுவரை எம்மைநிதம் மூடியுள்ள
இருள்திரையைக் கிழித்தெறிந்து
குன்றுநுனி விளக்குப்போல் நன்றுசெய
வேண்டாமோ? இன்னுஞ் சோர்வா?

சிலையெடுத்தல், மாநாடு, சொற்பொழிவு,
கவியரங்கம் இத்தியாதிக்
கலகலப்புப் பலமலிந்த சலசலப்புச்
செய்கைகளாற் புதியதான
நிலைபிறந்து விடுமன்றோ; அதனாலே
எங்களது பெருமை மீண்டுந்
தலையெடுத்துத் தொடருமென்றோ வாயூறல்
உண்மையிலே தப்புத் தப்பு.

தெருப் புழுதிப் பூச்சுக்குள் இனம்மூழ்கும்
இதயங்கள் உருக்கு லைந்து
நெருப்பிழந்த விறகுகளாய் நிதமுழைத்து
வளனழிந்த சலிப்பு நீங்கத்
திருப்பங்கள் பலசமைத்துச் செயற்படுத்தி
அவற்றைமிகச் செம்மையாக்கிப்
பெருக்கிடுவோம் இன்பத்தின் பெருவெள்ளம்
புதியதோர்நல் லுலகஞ் செய்வோம்.

புகைக்காவி யுறிஞ்சவுடல் வெளுத்துழைக்கும்
ஏழைகளின் புகைந்த வாழ்வைப்
பகைத்தவரை வஞ்சித்த பஞ்சத்தைப்
பஞ்சத்தால் வாட வைக்கும்
மிகைச் செயலை உருவாக்கிப் பெருவாழ்வுச்
சிகரத்தில் ஏற்றி அன்புக்
குகைக்குள்ளே கூத்தாடி அவர்மகிழப்
புதிதான உலகஞ் செய்வோம்.

மிதவாதப் பேச்சுகளால் மேடைகளிற்
சொல்ல டுக்கிக் கட்டல் மட்டும்
இதமான சேவை இதால் எல்லாமே
நிறைவேறுங் குறைகள் மாறும்
அதுபோதும் எனநம்பி இனியும்நாம்
அப்பழைய வழியிற் போதல்
புதிதான நெறியல்ல முறையுமல்ல;
புத்திக்கும் ஏற்ற தல்ல.

கொடுமையிருள் தேய்ந்தழிந்து விடிகின்ற
திருநாள்கொண் டாட வேண்டும்
கொடுமைகளின் குலமறுத்து விடுவதொடு
முடிவதில்லை எமது வேலை
அடிமைவிலங் குடைத்தெமது நடப்பாட்சி
அன்பாக மலர வல்ல
நடுநெறியை வளர்த்திடுவோம் வள்ளுவஞ்சொல்
நவமான உலகஞ் செய்வோம்,

பழித்திறத்தை அறுக்கவந்த பரம்பரையை
வழிப்படுத்தி நிமிர்ந்த நோக்கில்
மொழித்திறத்தால் செயற்றிறனாற் சமுதாயக்
கயமைகளைக் களைந்த ழித்துக்
குழிபறித்தே அவற்றையெலாம் கூண்டோடே
புதைத்தின்றே இன்பம் பொங்கிச்
செழித்தோங்குஞ் சிறப்பான அறஞ்சேர்ந்த
நிறைவுடைய வாழ்வு காண்போம்.

அன்பளிப்பு

# 5 பூ பீடிக் கொம்பனி

62, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12

# வி. கனகலிங்கம்பிள்ளை அன் சன்

17. சென்ஜோன்ஸ் வீதி,
கொழும்பு-11

தொலைபேசி: 25883



காதலிலே வேதனையாம் களையகற்றி
இளைஞரெலாங் களித்து, வாழும்
பாதையிலே நடைபயிலும் பாவையரின்
ஆசைகளின் முடிச்ச விழ்ந்தப்
போதையிலே வெற்றிபெற, சாகாத
புதுமைநல முண்டி ராம
சீதைகளாய்ச் சிறப்பான பொறுப்பேற்கும்
அமுதனைய செயலைச் செய்வோம்.

வேற்றுமையைக் கொன்று; ஒன்றாய் இன்றுமுதல்
நன்றெண்ணி நலன்கள் மேவ
ஆற்றிடுவோம் பெரும்பணிகள் அவை விளைந்து
பெருமணியாய் அணிகள் செய்யச்
சாற்றிடுவோம் புதுப்பாடல், ஏற்றிடுவோம்
சபதத்தை; எழுக! நோக்கம்
போற்றிடுவோம் தொழிற்படுவோம் ஒன்றென்னும்
புதியதோர் பொன் உலகஞ் செய்வோம்.

ஆ தலினால் என் அன்பே, ஆதாரம்
யான்வாழ வேண்டு மென்றால்
சூதனைய மோசடிகள், கொடும்பகைகள்
புரையோடிப் போன வாழ்க்கை
சாதனையாற் றிருத்தமுற வழித்துணையாய்ச்
சாவரைக்கு முழைக்க வேண்டும்.
மூதறிஞர் மன ஏக்கம் முற்றுமற
வெற்றி பெறும் பாதை போவோம்.

செய்மதியிற் போயின்று மதிக்கெதியின்
செயற்றிறனை அறிவு றுத்த
மெய்மதியில் அடிபொருத்தி மண்ணெடுத்தும்
முகில்கிழித்துத் திரும்பிவிட்டார்
ஐயமினி இல்லையடா என்னாவல்
அதிவிரைவில் தீருங் காண்பாய்
உய்யவொரு மதியாக இணைவோம்வா
இனியுமொரு தனிமைப் போக்கா?

## முத்துக்கள் மூன்று

¶ அறியாமை இருக்கும் இடத்தில்தான் கோழைத்தனம் குடிகொண்டிருக்கும். அறிவுடைமை இருக்கும் இடத்தில் வீரம் கோலோச்சும்.

¶ கண்ணியத்தை நாம் கடைப்பிடிக்கவும், காரிய மாற்றும் திறனைப் பெறவும் நமக்கு உண்மையான துணை அறிவு ஒன்றுதான்!

¶ "மன்னிப்பு" இருக்கின்றது என்பதற்காகத் தவறு செய்வது மாபெரும் குற்றமாகும்.

# ராதையின் பாதையில்........

**தொடர் நாவல் 1**

மென்மையான இலவம்பஞ்சு மெத்தையில் தன்னை மறந்த நிலையில் தூங்கிக்கொண்டிருந்த ராதை உதயக் கதிரவனின் மெல்லிய இளங்கீற்று வெய்யிலின் வெப்பம் உடலைத் தாக்கத் திடுக்கிட்டுக் கண்விழித்தாள். அவளுக்கு எதிரேயிருந்த அவள் தோழி ஜானகியின் படுக்கை விரிப்பு ஒழுங்காக்கப்பட்டு வெறுமையாகக் காட்சி அளித்தது. அவள் அலட்சியமாக அண்ணாந்து தன் தலைமாட்டிற் தொங்கிக்கொண்டிருந்த சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஏழடித்து, ஐந்து நிமிடங்களாகியிருந்தன. அவ்வளவு நேரமாகியுங்கூடப் படுக்கையில் இருந்து எழுந்திருக்க விருப்பமற்ற நிலையில், எழுந்திருக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின்பேரில் சோம்பல் முறித்தபடியே தன் தலையணையின் அடியில் இருந்த நாட்குறிப்பை எடுத்துத் திறந்தாள். அதற்குள் இருந்த பால முருகனின் படம் அவளைப் பார்த்து அபயகரம் நீட்டியபடியே சிரித்தது. அதைத் தன் கண்களில் மிகுந்த பக்தியோடு ஒற்றிவிட்டு யன்னற் கட்டிலிருந்த பிறஷையும், பேஸ்டையும் எடுத்துக் கொண்டு குளியலறையை நோக்கி நடந்தாள்.

"ஹலோ! ராதை குட்மோனிங்! எப்படியோ ஒருவாறு எழுந்து விட்டாய் ......ம் சீக்கிரம் குளித்து 'ட்றெஸ்' செய்துகொண்டு புறப்படு 'லைபிறறிக்குப்' போகலாம்". குளியலறையை ஒட்டியபடி நீண்டு சென்ற ஒரு விருந்தையில் குளித்து வாரிவிடப்பட்ட அழகான நீண்ட கூந்தல் தோள் மேற் புரள புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருந்த ஜானகிதான் அவளை வரவேற்றாள்.

"வெறிகுட் மோனிங் ஜானி, ஐந்து நிமிட அவகாசங் கொடு இதோ சீக்கிரமாக வந்துவிடுகிறேன்", என்று கூறிக் குளியலறைக்குட் சென்ற ராதை சொன்னபடி, தலைவாரி சாதாரண அலங்காரத்துடன் வெளி வந்தாள்.

"ஐம் றெடி....."என்று கூறிவிட்டுத் தன் தோழியைப் பார்த்தாள் ராதை.

'ஜிலு ஜிலு' என்ற குளிர்ந்த மலைப் பிரதேசத்தை அடுத்துள்ள பேராதனைப் பல்கலைக் கழகம் அன்று சூரியனின் செங்கதிர் ஒளியில் கெம்பீரமாகக் காட்சியளித்தது. மாணவ மாணவிகள் திறந்திருந்த பெரிய வாயிலினூடாகப் போவதும் வருவதுமாக இருந்தனர். அதே வாயிலூடாகச் சென்ற ராதையும் ஜானகியும் பல்கலைக்கழகத்தை அடைந்தனர். அவர்கள் லெக்சர் ஹாலைத் தாண்டி வாசிகசாலையை அடைவதற்குள் வழி மறித்துப் பேசிய மாணவ மாணவிகளுடன் உரையாடியதில் சில நிமிட நேரஞ் சென்றது. அன்று போயாதின விடுமுறையாயிருந்ததால் தாமதத்தைப் பற்றிய அக்கறையின்றி நீரில் தன்னிச்சையாக நீந்திச் செல்லும் இரண்டு அன்னப் புட்கள் போல கற்பனையில் மூழ்கியபடி நடந்து சென்றனர் அந்த இரு பெண்களும்.

அவர்கள் 'லைபிறறியை' அடைவதற்குள் சற்றுத் தூரத்தில், சுவர்மறைவில் நின்ற சில மாணவர்கள் வாயில் இருந்து எழுந்தது ஒரு பாடல்.'கோபியர் கொஞ்சும் ரமணா, கோபாலக் கிருஷ்ணா கோபியர் கொஞ்சும் ரமணா" சுமாரான குரலில் வந்து கொண்டிருந்த பாடல், பெண்கள் இருவரைக் கண்டதும் உச்சஸ்தாயியில் எழுந்தது. அதில் விந்தை என்னவென்றால் அந்த ஈரடிகளுமே திரும்பத் திரும்பக் கேட்டன.

ராதையும் ஜானகியும் அவர்களை முறைத்துப் பார்த்தபோது எங்கோ ஒரு மூலையில் இருந்து ஒரு கட்டுப் புத்தகத்துடன் வந்து கொண்டிருந்தான் ரமணன். ராதைக்குக் கோபம் மீறி அது ஆத்திரமாகப் பிரவாக மெடுத்தது. அதனால் அவள் பட்டுக் கன்னஞ் சிவக்க உதடுகள் துடிதுடிக்க உடல் பதறியது. பயத்தினால் ஏற்பட்ட நடுக்கம் அவளைச் செயலிழக்கச் செய்தது. உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு அவள் கண்களை நீர்த்திரையிட்டது. அவள் இப்படி ஒரு நிகழ்ச்சியை எதிர்பார்க்கவேயில்லை. இதுவரை வேறு எவருக்குந் தெரியாது - தெரிந்திருக்க முடியாது என்று அவள் பேணிக்காத்து வந்த இரகசியம் எப்போதோ பரகசியமாய்விட்டதை உணர்ந்தபோது, அவள் திடுக்கிட்டாள்.

'இடியட்ஸ்' அவள் உதடுகள் அவள் உத்தரவையும் மீறி அசைந்து கொள்கின்றன.

"ஹோல்ட் யுவர் ரங் ராதை... நீ எதற்காக ஆத்திரப்படுகிறாய் அவர்கள் எதையாவது படிக்கட்டுமே... உனக்கென்ன... எனக்கென்ன? யூ டோன்ட் பே அற்றன்ஷன் " ஜானகி தன் தோழியை அடக்கினாள்.

"வா ஹாஸ்டலுக்கே திரும்பிப் போய்விடுவோம் ஜானி... ஐ ஆம் நொட் மை செல்வ்... எனக்கு மனசு நலலாவேயில்லை " ராதை கெஞ்சினாள்.

ஜானகி புன்னகையுடன் தன் தோழியைப் பார்த்து நின்றாள். "எனக்குக்கூட மறைத்துவிட்டாயே ராதை... ஊருக்குள் மலிந்தால் சந்தைக்கு வரும் என்று கூறுவார்கள். எனக்குக் கூடச் சாடையாக இதுபற்றித்

திருமதி ந. பாலேஸ்வரி

# நியூ லங்கா பாம்
# NEW LANKA FARM

காங்கேசன்துறை வீதி, இணுவில்.

எங்களிடம்,

பழவகைதரும் கன்றுகள், பூஞ்செடிக்கன்றுகள் என்பன சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

*Prop:*
S. K. THURAISINGHAM J. P.,
Kankesanthurai Road,
INUVIL.

# இளந் தமிழர் முன்னேற்ற மன்றம் நடாத்தும்
## ஈழவளக் கண்காட்சி
## (1971)

கண்காட்சி ஐந்து பிரிவுகளாக இடம்பெறும்.

- கைத்தொழில்
- விவசாயம்
- கைப்பணி
- அறிவியல்
- பண்பாடு

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மறைந்தும், மறக்கப்பட்டிருக்கும் பொருளாதார வளங்களை வெளிக்கொணர்ந்து அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, ஆக்கபூர்வமான செயல்களில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துவதற்காகவும், படித்துவிட்டு வேலையின்றியிருக்கும் வாலிபர்களின் கவனத்தை இத்துறையில் செயல்படுத்த ஊக்குவிப்பதற்காகவும் இக்கண்காட்சி வழிவகுத்துக் கொடுக்குமென எதிர்பார்க்கின்றோம்.

கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் மன்றங்கள், பாடசாலைகள், தொழிற்தாபனங்கள் ஆகியவற்றைக் கண்காட்சிப் பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தொடர்பு முகவரி:
கண்காட்சிப் பொறுப்பாளர்,
இ. த. மு. மன்றம்
18, அரத்தூசா ஒழுங்கை, கொழும்பு-6,

இ. த. மு. மன்றச் செயற்குழு




தெரிந்துதான் இருந்தது. ஆனால், நீயாகக் கூறட்டும் என்று காத்திருந்தேன்." என்று சொல்வது போல் இருந்தது அவள் பார்வை. அவள் வாய்திறக்காமல், ராதையாகவே பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று மௌனமாக நடந்தாள்.

"நீ என்ன சொல்கிறாய் ஜானி.. அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசட்டுமா? அவர்கள் கிண்டலாகப் பாடிய பாடல் எனக்குத்தான் என்று தெரிந்தபின்பும், அதைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமென்கிறாயா ?" ராதை படபடத்தாள்.

"வட் ராதை........" ஜானி குறும்புடன் கேட்டாள். "அப்போ அவர்கள் கூறுவதில் ஓரளவு உண்மையுண்டு என்பதை நீயும் ஒத்துக் கொள்கிறாயா? வட் ஏ பிற்றி ராதை. இதுகால வரை என்னிடம் கூடக்கூறாமல் மறைத்து விட்டாயே அவ்வளவு தூரம் உனக்கு என்மீது நம்பிக்கையிருக்கு... இல்லையா? என்று வழமையான புன்முறுவலுடன் எதுவுமே அறியாதவள் போற் கூறினாள் ஜானகி.

ராதைக்கு அப்போதுதான் தான் விட்ட தவறு புரிந்திருக்க வேண்டும்! தன் அவசர புத்திக்காகத் தன்னையே நொந்து கொண்டாள். அவள் உதடுகள் ஒன்றையொன்று கவ்விக்கொண்டன. தன்வாயாலேயே தான் கெட்டு விட்டதை நினைத்த போது அவளுக்குத் துக்கந் தொண்டையை அடைத்தது. ஜானகி தன்னைப்பற்றி அறிந்து விட்டாளே என்ற துக்கத்தை விட இதுவரை தான் அவளிடம் இருந்து இதை மறைத்து விட்டதால் அவள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறாளோ என்பதைச் சிந்திக்கவே அவளுக்கு வெட்கமாகவும், துக்கமாகவும் இருந்தது.

"ஜானி ரமணனுக்கும் எனக்குமிடையில் ஏதாவது இருப்பதாக நீ கூட நினைக்கிறாயா......? திடீர்


## கற்பகம்

அடுத்த இதழில்......

முருகையன்

எம். ஏ. நுஃமான்

திருமலை வேலன்

பண்டிதர் க. வீரகத்தி

வ. சிவராசசிங்கம்

எஸ். இராஜம் புஷ்பவனம்

செ. கந்தசாமி

பேராசிரியர்
கா. குலரத்தினம்

கலாநிதி
எஸ். குமாரசாமி

முத்து இராசரத்தினம்

பிரகாஷ்
(தமிழக எழுத்தாளர்)

மாவை நித்தியானந்தன்

செ. யோகநாதன்

ந. பாலேஸ்வரி

இவர்களின் படைப்புகள்.

நீ கூட நினைக்கிறாயா...? திடீர் என அழுவாரைப் போற்கேட்டாள் அவள், தன் மனம் தன்னையே ஏமாற்றத் துணிந்த நிலையில்

"நான் இதுவரை உன்னைப் பற்றி எதுவுமே நினைக்கவில்லை ராதை அப்படி ஏதாவது இருக்குமானால் நிச்சயமாக நீ அதை என்னிடம் கூறியிருப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு ஆயினும் உன்னைப்பற்றிப் பலரும் பல மாதிரியாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அதில் எவ்வளவு உண்மை எவ்வளவு பொய் என்பது உனக்குத் தான் தெரியும்....! தெரியவேண்டும்!! என்று நசுக்காக விடையளித்தாள் ஜானகி.

ராதை இப்படியொரு பதிலை எதிர்பார்க்கவேயில்லை. அதனால் ஜானகியின் கூற்று அவளைச் சிந்திக்கத் தூண்டியது. "பலரும் பல மாதிரிப் பேசிக்கொள்கிறார்கள்" என்று ஜானகி கூறியது அவள் செவிகளில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஜானகிக்கு எப்படியோ விடயந் தெரிந்துவிட்டது. செய்தி, தலைவாயில் கடந்துவிட்டது என்பதை உணர்ந்ததும் அவள் உள்ளதை உள்ளபடியே ஜானகியிடங் கூறத் துணிந்து விட்டாள். அந்தத் துணிவு இரண்டாம் முறை சிந்திக்க அவளைத் தூண்டவில்லை. ஆகவே. "ஜானி " என்றழைத்தாள் குழைவுடன்.

"என்ன ராதை......?" என்றாள் ஜானகி பரிவுடன். "ஜானி நீ என்னைத் தப்பாக நினைத்து விடாதே உன்னிடத்தில் நான் இனி எதையும் மறைக்கப் போவதில்லை. எப்போதோ கூற வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் துணிவிருக்கவில்லை சந்தர்ப்பம் சூழ்நிலை இன்று கூற வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை எனக்கு ஏற்படுத்திவிட்டது. அதனால் நான் கூறப் போவதைப் பொறுமையாக இருந்து கேட்டுவிட்டு எனக்குக் கூறவேண்டிய புத்திமதியைக் கூறு அதன்பின் நான் உன் விருப்பப்படியே நடக்கிறேன்" என்று ராதை கூறியபோது ஜானகி பரிவுடன் அவளைப் பார்த்தாள்.

வளரும்.

## மொழிப் பற்றிலிருந்து..............

கற்பித்தலும் கற்றலும் தாய்மொழியில் இருத்தல் கடமை என்ற தெளிவுதான் இன்று தமிழ் நாட்டு அறிஞர்க்கு வேண்டும். ஒரு தலைமுறை வரையில் இந்த நிலைக்கு இடங்கொடுப்போமானால், அடுத்த தலைமுறையிலே அறிவியல் நூல்கள் பல தாய்மொழியிலே இயற்றப்பட்டு விடும். இந்தத் தலை முறையில் தாய் மொழியில் சிந்தனை வளர இடம் கொடுப்போம். அடுத்த தலை முறையில் நூல்கள் எழ வழி வகுத்தவர்கள் ஆவோம். இந்த நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் இல்லை. தொன்று தொட்டு மூளை வளம் உடைய நாடு இது. ஆதலின் நம்பிக்கை கொள்வோம்.

—கலாநிதி மு. வரதராசன்



## நாட்டுப் பாடல்



## தாலாட்டு

### மக்கள் கவிமணி மு. இராமலிங்கம்

பச்சைப் பசேலென்று பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கும் நெல் வயல் நடுவே ஒரு கிணற்றருகிலுள்ள ஆடுகாலில் ஒரு ஏனை தொங்குகின்றது குயில்கள் கூவுவதால் உண்டாகும் சத்தத்தில் இன்பங்கண்டு அவ்வேணைக்குட் கிடக்குங் குழந்தை தூங்குகின்றான். வயலுக்குள் நாற்று நடுகிறாள் தாய். சிறிது நேரத்தில் தூங்கிய குழந்தை எழுந்து சிணுங்குகிறான். தாலாட்டு தாயின் வாயில் தவழ்கின்றது.

அழாதே அழாதே யடா
எந்தன் அரசே
அரை பிடி நாற்றுநட்டு
முலை தருவேன்.

★

சந்தண மரம் பிளந்து
தொட்டிலுங் கட்டி
தாமரை இலை பறித்துச்
சாணையும் போட்டு

★

குங்கும மரம் பிளந்து
கூடமும் சாய்த்து
குயிலோடே ஏசல் பாடி
வளர்ந்த மைந்தா!

★

அழாதே அழாதே யடா
எந்தன் அரசே
அரை பிடி நாற்றுநட்டு
முலை தருவேன்.

★

## சிறுகதை

# பொன்னம்மாவும் தோசைச் சட்டியும் அவளது மகனும்

## விழிப்பு

நெல்லை க. பேரன்

அந்த ஊருக்குப் பொதுவான கோயில் மணி, விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. முதல் நாளிரவு தோசைக்கு மாவரைத்த அலுப்பு இன்னும் தீராமலேயே பாயில் உழன்று கொண்டிருந்த பொன்னம்மா இப்போது வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். அதிகாலை ஐந்துமணிப் பூசைக்கு மணியடித்துக் கேட்கிறது. ஐயர் வந்துவிட்டார். கோயில் மணிதான் அவளது கடிகாரம், பொன்னம்மாவைப் போலவே அந்த ஊரில் வசிக்கும் நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் கோயில்மணிதான் கடிகாரமாக இருந்து வருகிறது.

“எணேய்...... இன்னும் எழும்பேல்லையே... கோயில் மணியடிச்சுப் போட்டுது ...... ம்...... எணேய்...... ஆ அ...அ...அ... ஐயோ எழும்பேலாதாம்... என்னாலை எழும்பேலாதாம் .. காலை மடக்கிக் கொண்டுதே... எணேய்... இஞ்சை வாணை...... வாணை... இந்த நாரியைக் கொஞ்சம் நிமிர்த்திவிடு...”

சுவரோரமாகத் தூணுக்குப் பக்கத்தில் பாயில் படுத்திருக்கும் இளையதம்பியின் முனகல் சத்தந்தான் இது.

இளையதம்பிக்குக் கடந்த மூன்று வருடங்களாகப் பாரிசவாதம், இடையிடையே காய்ச்சல், வயிற்றோட்டம், இருமல் என்று சிறு சிறு வியாதிகள் ஆளை ஒரே படுக்கையாகப் போட்டுவிட்டது. பொன்னம்மாவும் கோட்டை, மூளாய் என்று திரியாத ஆஸ்பத்திரிகளில்லை. வர வர இளையதம்பி நன்றாக மெலிந்து ஆளே தடியாகப் போனதுதான் மிச்சம்.

வெளியில் காகம் கரைந்து கொண்டிருக்கிறது. வரப்போகின்ற வெளிச்சத்திற்கு அறிகுறியாக வானம் சிவந்து கிழக்கு வெளித்துக்கொண்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் கிழக்கு வெளித்துக்கொண்டுதான் வருகிறது. பொன்னம்மாவுக்கு மட்டும்? விடியாத கவலைகள் – முடியாத வேலைகள்.

பொன்னம்மாவைத் திருமணம் செய்த வேளையில் இளையதம்பி எவ்வளவு கொழுப்பாக இருந்தான். சுமார் நூற்றைம்பது பட்டி தோட்டத் தரையிலும் பயிர் நாட்டி நீரிறைத்து மிகவும் சுறு சுறுப்பானதோர் விவசாயியாக அவன் வாழ்ந்தான். இடையில் என்னவோ ஒரு கிழமை காய்ச்சல் என்று படுத்தவன் பிறகு எழுந்திருக்கவே முடியாமல் பாரிசவாதம் என்று படுக்கையில் கிடக்கிறான். அன்று முதல் பொன்னம்மாவும் தோசை சுட்டு விற்கும் தொழிலைக் கௌரவமாக மேற்கொண்டாள்,

சின்னத்துரை அவளது ஒரேயொரு மகன் ஆள் ஆம்பிளையாக வளர்ந்து விட்டானே தவிர அவனால் பொன்னம்மாவுக்கு ஒரு

## “கற்பகம்” இலக்கியக் குழுவின் வெளியூர்ப் பொறுப்பாளர்கள்

| பெயர் | முகவரி | இடம் |
|---|---|---|
| 1. செல்வி. எஸ். இராஜம் புஸ்பவனம் | “அமிர்த வாசம்”, அடம்பன் | மன்னார் மாவட்டம் |
| 2. திரு. ந. தங்கராசா | தம்பசெட்டி, பருத்தித்துறை. | பருத்தித்துறை |
| 3. திரு. எம். எஸ். எம். ஜிப்ரி | 108, கோல்ஸ் வீதி, கோட்டை, காலி. | காலி மாவட்டம் |
| 4. திரு. க. வீரகத்தி | “வாணி அகம்” கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. | வடமராட்சிப் பிரிவு |
| 5. திரு. க. சபாபதிப்பிள்ளை | 98, மஹியங்கனை வீதி பதுளை | பதுளை |
| 6. செல்வி. பெ. தமிழ்ச் செல்வி | 69/2, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம் |

வளரும் எழுத்தாளர்கள் அவ்வப் பகுதிப் பொறுப்பாளர்கள் மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

— ஆசிரியர் குழு

சதத்து இலாபமும் இல்லை. இருபத்தியிரண்டு வயதாகியும் சதா றோட்டுச் சுத்துகிற வேலைதான். திருவிழாக்கள், கூத்துகள், படங்கள் எதுவுமே தப்ப விடுகிறதில்லை. தாயிடம் எப்படியாவது பணத்தைச் சுருட்டிக்கொண்டு படத்திற்குப் போய் விடுவான். ஊரிலிருந்து தூரத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் புதிதாக ஏதாவது படம் திரையிடுகிறார்கள் என்றால் அங்கே தவறாமல் முதல்வரிசையில் நிற்பவர்களில் சின்னத்துரையும் ஒருவன். ஒரு நாள் அவனது அபிமான நட்சத்திரம் எம். ஜி. ஆர். நடித்த புதிய படம் வந்திருந்தது. தாயிடம் பணம் கேட்டபோது அவளிடம் இருக்கவில்லை, இல்லையென்று மறுத்துவிடவே இளையதம்பியின் வருத்தம் பார்க்க வந்தவர்கள் யாரோ கொண்டுவந்து கொடுத்த முட்டைகளைக் களவாக எடுத்துக்கொண்டுபோய் விற்றுவிட்டு யாழ்ப்பாணம் போயிருக்கிறான். விஷயமறிந்த பொன்னம்மா தான் பெற்ற குற்றத்திற்காக நெஞ்சிலடித்து அழுது புலம்பினாள். அவளால் வேறென்ன செய்யமுடியும். தான் தவமிருந்து பெற்ற ஒரேயொரு புத்திரன் என்று எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தாள். தாயின் கஷ்டங்களையும் தகப்பனின் வருத்தத்தையும் பற்றிக் கொஞ்சமேனும் சிந்திக்காமல் சின்னத்துரை சூடு சொரணை எதுவுமேயின்றி வழக்கம்போலவே தனது காரியங்களைச் செய்துகொண்டு வந்தான்.

‘உர்’ரென்று நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருக்கும் மகனையும் மூலையில் வருத்தம் தாங்கமாட்டாது முனகிக்கொண்டிருக்கும் இளையதம்பியையும் மாறிமாறிப் பார்க்கிறாள் பொன்னம்மா... கோயில் உள்ளே விக்கிரகங்கள் பூசையாகி ஐயர் சிறிய மணியைக் கிலுக்கும் ஓசையும் யாரோ ஊதுகின்ற சங்கின் ஒலியும் மறுபடியும் வந்து அவளது காதுகளில் எற்றுகின்றன.

நேற்றே புளிக்க வைத்த தோசை மாவுக்குள் சிறிது உப்புக் கரைத்து அளவாக ஊற்றிக் கலக்கிவிட்டுச் சட்டி விளிம்பில் பொங்கிப் படர்ந்து கிடக்கும் மாவைத் தன் பெரு விரலால் வழித்து உள்ளே விட்டுவிட்டுச் சின்ன அகப்பையை எடுத்துக் கொண்டு தோசை சுடத் தயாராகிறாள் பொன்னம்மா. அடுப்பில் தோசைச் சட்டி வேகிக்கொண்டிருக்கிறது. அருகே எண்ணெய்ச் சீலை வைக்கப்பட்ட சிரட்டை இருக்கிறது இன்னொரு பக்கத்தில் நன்றாகக் காய்ந்த தென்னம்மட்டை விறகாகக் கிடக்கிறது. பக்கத்தில் இன்னொரு சூட்டடுப்பையும் மூட்டிய பொன்னம்மா அதில் தாளிதச்சாமான்களைப் போட்டு மிளகாய்ச் சம்பலுக்குத் தேவையான வெங்காயம், சீரகம் முதலியனவற்றைத் தாளிக்கிறாள். பிறகு செத்தல் மிளகாயைப் பொரித்து அதை உரலில் போட்டு இடிப்பதற்குத் தயாராக வைக்கிறாள். மள மளவென்று அடுக்களைக்குள்ளேயே



கிடக்கும் மர உரலில் மிளகாயைப் போட்டு இடித்து அது ஒரு பதமாக வந்த பிறகு முன்னரேயே துருவி வைத்த தேங்காய்ப் பூவையும் போட்டுச் சேர்த்து இடிக்கிறாள். ஐந்து நிமிடத்தில் மிகவும் உருசியான ‘வறைச் சம்பல்’ தயாராகி விடுகிறது. பொன்னம்மாவின் தோசையை விட அவளது கைபட்ட வறைச்சம்பலுக்குத்தான் அவ்வூரில் உள்ள வாடிக்கைக்காரர்களுக்கு விருப்பம். முதலில் சுட்ட சிறிய தோசையை எடுத்து அவற்றை மள மளவென்று பிய்த்து வெளியே காகத்திற்குப் போடுகிறாள்.

காகத்திற்குப் போட்டால்தான் வியாபாரம் நன்றாக நடக்குமாம். இது பொன்னம்மாவைப் போல அந்த ஊரில் தோசை, அப்பம் சுடுகின்ற பலரிடமும் இருக்கின்ற ஒரு நம்பிக்கை. காகத்திற்குப் போடுவதால் வியாபாரம் அதிகரிக்கிறதோ இல்லையோ... ஆனால் கொஞ்சக் காகங்களுக்கென்னவோ ஒவ்வொரு ‘கடி’தோசை கிடைப்பது மாத்திரம் நிச்சயம்.

சம்பலை வறுத்து இறக்கி வைத்த அடுப்பில் ‘கேற்றிலை’ வைத்துத் தண்ணீர் சுடவைக்கிறாள் பொன்னம்மா தண்ணீர் சுட்டவுடன் தேனீர் போட்டுக்கொண்டு, பாயில் படுத்திருக்கும் கணவனையும் மகனையும் எழுப்புவதற்குப் போகிறாள்.

“ஐயோ... இஞ்சை கொண்டாணை...... ஆ...... கூப்பிட்டாலும் வராளாம்... அவனுக்கு ஒரே தோசை யாவாரமாப் போச்சுது...... தேத்தண்ணி எங்கே...... எங்கே தேத்தண்ணி ”.

முனகலுக்கிடையே திமிறி எழும்பிய இளையதம்பி பொன்னம்மா கொடுத்த தேத்தண்ணியை வாங்கி மடக்கு மடக்கென்று குடித்து முடிக்கிறான். நராங்கிப் போன அவனது நார் உடம்பை மெதுவாக மறுபடியும் பாயில் சாய்த்து விடுகிறான்.

“தம்பி தேத்தண்ணிபோட்டு வந்திருக்கிறன்... எழும்பிக் குடியப்பு... எழும்பு... தம்பி . எடராசா... எழும்பு மேனை ”

மகனைத் தொட்டு எழுப்புகிறாள்

‘‘சும்மா போணை... இதுகள் கிடக்கவும் விடாதுகள்.’’

“விடிஞ்செல்லே போச்சுது தம்பி...’’

‘‘ஊம்...’’

சின்னத்துரை தனது நெஞ்சுவரைக்கும் கிடந்த சாரத்தை இப்போது இன்னும் மேலே இழுத்துத் தலையையும் மூடிக்கொண்டு மற்றப்பக்கத்திற்குத் திரும்பிச் சுருண்டு படுக்கிறான்.

அது ஒரு சார மூட்டை.

பொன்னம்மா மறுபடியும் தோசைக்கடையில் ஆழ்ந்து விடுகிறாள்.

தோசைக் கடை கல கலப்படைகிறது.

காலையில் எழுந்தவுடன் தோசை வாங்க வருகின்ற பெண்கள் கூட்டம் இப்போது பொன்னம்மாவைச் சுற்றி வட்டமாக இருந்து ஊர்க்கதைகள் பேச ஆரம்பித்து விட்டது.

"என்னை மருமேன் இராத்திரி யாழ்தேவியிலை கொழும்பாலை வந்திட்டார். வரியாவரியம் கோயில் திருவிழாவுக்கை அவர் வந்திடுவர். அவர் வடம் பிடிக்காமல் எங்கடை தேர் அசையுமே..." இது மங்களத்தின் குரல்:

"எங்கட பொடிச்சிபக்கமும் வாறமெண்டு காயிதம் எழுதினவை இன்னும் காணேல்லை. ஒரு வேளை தேரையண்டி நாளைக்கு வருவினமோ சொல்லேலாது. அவர் சிலவேளை எலெச்சன் வேலைக்கெண்டு தூர இடத்துக்குப் போறவர் இந்த முறையும் எங்கை விடுகிறான்களோ தெரியேல்லை..." இது பக்கத்து வீட்டுப் பாறுவதியின் குரல்.

" ஏன்ரி பொன்னம்மா உன்ரை மேன் சின்னத்துரையை உப்பிடியே விட்டுக்கொண்டு போனால்... பாவம்... அவன் இளைய தம்பியும் வாதம் பத்திப் போய்க் கிடக்கிறான் நீ நெருப்பைத் தின்டு உழைச்சுக் கஷ்டப்படுகிறாய் .. பொடியனை எங்கையேனும் கடை கண்ணிக்கு விட்டு உழைப்பியன்..." மங்களம்தான் பேசினாள்.

"ஓமக்கா... உந்தப் பொடியன் வர வர மோசமாப் போச்சுது... நேற்றும் எங்கட ஒழுங்கையாலை பள்ளிக்கூடத்துக்குப் போன பெட்டையளைப் பார்த்து ஏதோ சிரிச்சுப் பகிடி விட்டானாம். அதுகளின்ரை தாய் தேப்பன் அறிஞ்சால் உவருக்கு என்ன நடக்கும்? '' பாறுவதிதான் இப்போது பேசினாள்.

பாறுவதி சொன்ன செய்தி பொன்னம்மாவுக்குப் புதியது.

பொன்னம்மா அவமானத்தால் குறுகிப்போனாள். தன்னுடைய மகன் உழைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஊரில் இப்படிப் பெண்களிடம் கெட்ட பெயர் எடுக்கவேண்டியிருக்கிறதேயென்று கவலைப்பட்டாள். நல்ல பள்ளிக்கூடத்திற்கு அவனை அனுப்பிப் படிப்பிக்க வைக்காதது தன்னுடைய குறைதான் என்று கவலைப்பட்டாள். ஏன் ஊர்ப் பள்ளிக்கூடத்திலும் கூட ஏழாம் வகுப்புடன் சின்னத்துரை படிப்பை முடித்துக்கொண்டான். பள்ளிகூட நாட்களில் மரவள்ளி தோட்டத்திற்குள்ளும் தக்காளிச்செடியினுள்ளும் ஒளித்துக்கிடந்துவிட்டுப் பள்ளிக்கூடம் விட்ட நேரம் பார்த்து மற்றப்பிள்ளைகளுடன் தானும் ஒருவனாக வீட்டுக்குச் செல்லும் சின்னத்துரையைப் பற்றி அவளுக்கு முன்னரேயே தெரியும். ஆனாலும் ஒரேயொரு மகன் என்று அடிக்காமல், பேசாமல் இருந்தாள். இனி அவன் சிறு வயதில் செய்கின்ற தவறுகளையெல்லாம் ஊரார் வந்து சொல்லும் போது அவனுக்காக பரிந்து அவர்களுடன் வாதாடுவாள்.



அப்போது முதல் சுதந்திரமாக அவனை வளரவிட்டு இப்போது வளர்ந்த பிறகு கண்டிக்கமுடியாமல் வேதனைப்பட்டாள்.

அன்றைக்கும் மத்தியானம் உழுந்து வாங்கிவந்து வைத்துவிட்டுத் தலை கனக்கிறது என்று வீட்டுத்தரையில் தாவணித் தலைப்பை விரித்து விட்டுப் படுத்தவள். சற்றுக் கண்ணயர்ந்துவிட்டாள் பக்கத்துவீட்டுப் பாறுவதி ஓடிவந்து 'பொன்னம்மா... எடி பொன்னம்மா' என்று எழுப்பினாள்.

"சந்தியிலை ஆரோடயோ கலாதிப்பட்டு உன்ரை பொடியனைப் பொலிசுவிலை பிடிச்சுக் கொண்டு போட்டான்களாம்" என்று பாறுவதி சொன்ன செய்தி அவளுக்குப் பேரிடியாக விழுந்தது.

'ஐயோ என்ரை பிள்ளை ..' என்று குழறிக் கொண்டே சந்திக்கு ஓடினாள். எலெச்சன் கதையிலை இரண்டு பேருக்குமிடையிலை வாக்குவாதம் ஏற்பட்டுக் கடைசியில் அடிகடியில் முடிந்தது என்றும் சந்தியில் கடையிலை கிடந்த சோடாப் போத்தலை எடுத்துச் சின்னத்துரை மற்றவனுக்கு அடித்துவிட்டான் என்றும் அதுதான் பொலிசில் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றும் சொன்னார்கள்.

"ஐயோ... அவங்கள் என்ரை பிள்ளையை இடிஇடியெண்டு இடிச்சுப்போடுவாங்கள். பொலிசிலை பிடிச்சால் சும்மா விடுவங்களே '' என்று கலங்கினாள்.



தனது ஒரே அண்ணன் செல்லையாவிடம் ஓடிப்போய் மகனை எப்படியும் பிணை எடுத்து வரவேணும் என்று அழுதாள். செல்லையா ஊரிலை பெரிய மனுஷன். கோயில் தர்மகர்த்தா. செல்லையாவுக்கு ஒரேயொரு மகள். அவளை யாழ்ப்பாணத்திலை பெரிய பள்ளிக்கூடத்திலை விட்டுப் படிப்பிச்சுக் கொண்டிருந்தார். தனது கூடப்பிறந்த சகோதரியான பொன்னம்மாவைத் தனக்கு உறவு என்று சொல்லிக்கொள்ளவே அவர் தயங்கினார். சமூகத்தில் தன்னுடைய அந்தஸ்துக்கும் சகோதரியவையின் ஏழ்மைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது என்பது அவர் எண்ணம். அதுவும் சின்னத்துரை வெறும் தறுதலையாகத்திரிகிறான் என்பதில் இன்னும் கொஞ்சம் ஆத்திரம். பொன்னம்மா ஓடிவந்து விஷயத்தைச் சொன்னதும், "உந்தக் காவாலிக்காகப் பொலிஸ் ஸ்டேசனுக்குப் போய்வர நானென்டும் மானங்கெட்டவனில்லை. உவனுக்குஉப்பிடித்தான் வரவேணும்" என்று முகத்திற்கு நேரேயே சொல்லிவிட்டார்.

"ஏழையாய்ப் போய்விட்டமெண்டு அண்ணைக்கும் எங்களைப் பிடிக்கேல்லைப் போலை" என்று வேதனையோடு சொல்லிவிட்டு பொன்னம்மா திரும்பிவிட்டாள்.

சின்னத்துரைக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

மகனுக்காக ஏங்குவதா, கணவனுக்காக அழுவதா என்று

பொன்னம்மாவுக்குத் தெரியவில்லை. இருவரைப்பற்றிய கவலை அவளை நன்றாக வாட்டியது. போதாக் குறைக்குத் தோசைச் சட்டிவேறு அவள் உடம்பை வாட்டியது. ஒரு மாத காலத்திற்குள்ளேயே பொன்னம்மா படுக்கையில் விழுந்து விட்டாள். படுத்தவள் படுத்ததுதான். கணவன் இளையதம்பி உயிரோடு இருக்கும்போதே பூவும் மஞ்சளுமாக அவள் இறந்துவிட்டாள். சிறையிலிருந்து திரும்பிய சின்னத்துரை முற்றிலும் மாறிவிட்டான். எப்படியும் தான் உழைத்து வாழ வேண்டும்; தனது உழைப்புப் பணத்தை ஆசைதீரக் கொண்டுவந்து அம்மாவின் கையில் கொடுக்க வேண்டும்; என்றெல்லாம் விரும்பிக்கொண்டு வீடு திரும்பிய அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

தான் பொறுப்புணர்ச்சிபெற்ற புது மனிதனாகத் திரும்பிவந்ததை யார் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டும் என்று நினைத்தானோ அந்த அன்பு உருவம் இப்போது இல்லை. தோசையை வேகவைத்த விறகு அவளையும் எரித்துவிட்டது.

"எணேய்... ... எணேய்... ... ... என்னை விட்டிட்டுப் போயிட்டியே ஆ அ அ... ஐயோ எணேய் நீ போட்டியே..." என்று புலம்பும் வருத்தக்காறத் தந்தையை அவன் பார்த்தான்.

நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவதுபோல உணர்ந்தான். தாயின் பிரிவுக்காக மனதார அழுதான்.

சின்னத்துரை சிறைக்குப் போனவன் என்பதால் கடைகண்ணியில் அவனை யாருமே வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முன்வரவில்லை. குத்தகைத் தோட்டங்களும் பறிபோய்விட்டன. உடலடியாகப் பணம் கிடைக்கக்கூடிய உழைப்பு எதுவும் சின்னத்துரைக்கு அகப்படவில்லை. ஊரில் பகட்டாக வாழும் மாமன் செல்லையாவை அணுகவும் அவனுக்கு மனமில்லை. 'தன்னுடைய மகளின் வேலைக்காரனாவதற்குக்கூடத் தகுதியற்றவன்' என்று தன்னைப்பற்றி யாரிடமோ சொன்னாராம். அத்தகைய மாமனிடம் அவன் ஏன் போகப்போகிறான்.

ஒரு நாள் இரண்டு நாள் பட்டினி கிடக்கலாம், தொடர்ந்து இருக்கமுடியுமா? அதுவும் பாரிசவாதத்தால் கஷ்டப்படும் தகப்பனாரின் பசியைப் போக்கவாவது அவன் எப்படியாவது உழைக்கவேண்டும்.

பொன்னம்மா விட்டுப்போன தோசைச் சட்டியும் தோசைக் கறண்டியும்தான் அவன் கண்ட மிச்சம். ஒருநாள் முழுவதும் இருந்து யோசித்தான். பளிச்செனஅவன் மூளையில் ஒரு யோசனை பிறந்தது.

மறுநாள் சின்னத்துரையின் வீட்டில் அடுக்களையிலிருந்து 'ஸ் ஸ்' என்ற சத்தம் வெளிவருகிறது. சின்னத்துரை தோசைச் சட்டிக்கு முன்னால் உட்கார்ந்து வட்டமாகப் பொங்கிவரும் தோசையைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

தோசைச்சட்டி வேகிக்கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

செய்யும் தொழிலே தெய்வம்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலும்தான் உதவி
கடமைதான் நமது பதவி.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்



**கவிதை**



**குடும்பம்**

# புதுவீடு

ச. வே. பஞ்சாட்சரம்

புத்தம் புதிதான
  பொன்போன்ற வீடன்றோ?
  போட்டிருக்கும்
மெத்தப் பழைய
  தளபாடம் வீண் ஊத்தை!
  விற்றுப்போய்,
அத்தான்! புதிதாய்
  அழகியவை வாங்குவமா?
  அள்ளுகின்ற
சித்திரங்கள் வாங்கிச்
  சிறப்பாக மாட்டிச்
  சிதைந்துள்ள

மாமாநல் மாமி
  படத்தை மறைப்போமா?
  வாசலிலே
தாமாய் நுழையும்
  தரித்திரங்கள் உட்காரத்
  தாழ்வாரம்
நாமாகப் போட்டுள்ள
  நாய்தூங்குங் கட்டிலையும்
  நாளைக்கே
ஆமாம், அடிவளவுள்.........
  அத்தான் ஏன் வேதனையோ?

கட்டுரை

பொருளாதாரம்

# இலங்கையின் பொருளாதாரத்தில் பனை வளம் வகிக்கக்கூடிய முக்கியத்துவம்

ஆ. துரைரெத்தினம்
B. Sc. Agric. (Ceylon)

மறைந்தும், மறந்தும் இருக்கும் வளங்களில் பனை வளமும் ( Borassus Flabellifer; linn ) ஒன்றுகும். பனைமரங்கள் இலங்கை இந்தியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, மலேயன் ஆர்சிபெலா-கோ ( Malayan archipelago ) போன்ற நாடுகளில் இயற்கைத் தாவரங்களாக வளர்ந்திருப்பதால் மார்டெலி என்ற இத்தாலிய விஞ்ஞானி புடைக்காலத்தில் ( Tertiary Period ) மூன்று கண்டங்களும் (ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா) இந்து சமுத்திரத்தால் பிரிக்கப்படுமுன் தொடர்நிலப்பரப்பாக இருந்திருக்க வேண்டுமென முடிவு கொண்டுள்ளார்.

ஆராய்ச்சிக்கே வழிவகுத்துக் கொடுத்துள்ள கற்பகதருவாகிய பனை, இலங்கையில் வேறு பயிர்கள் வளருவதற்கு ஒவ்வாத மண்ணையுடைய பகுதிகளிலும், போதிய நீர்வசதி இல்லாத பிரதேசங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் வளர்ந்து பயனளிக்கக் கூடிய தாவரமாகும். இத் தான்தோன்றித் தாவரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் அரை லட்சம் ஏக்கர் நிலப்பகுதியில் முதிர்ந்த மரங்களாக காட்சி தருகின்றன. வடமத்திய மாகாணத்தில் கலாவாவி வாய்க்கால் ஓரங்களிலும், மத்திய மாகாணத்தில் (1650 அடி உயரம் 74°F) பேராதனைப் பூந்தோட்டத்தில் மகாவலி ஓரங்களில் சில பகுதிகளிலும், பதுளையிலும் (2450 அடி உயரம் 71½°F) மற்றும் தென்மாகாணத்தின் சில பகுதிகளிலும் கீழ்மாகாணத்தில் திருகோணமலைப் பகுதிகளிலும் பனை மரங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் மண்அரிமானம் ஏற்படும் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் குறிப்பாகக் கண்டி, மாத்தளை, கம்பளை, நாவலப்பிட்டி போன்ற இடங்களில் தேயிலைச் செடி விளைவு குன்றியதால் உபயோகிக்கப்படாது கைவிடப்பட்ட இடங்களில் பனை ஒரு உகந்த பயிராகும். இப் பயிர் வடலிப்பயிராக இருக்கும் காலத்தில் நெருக்கமாய் நட்டி



ருப்பின் மண்ணின் அரிமானத்தைத் தடைசெய்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் என்பதற்கும் சில ஆதாரங்கள் உள. ஆகவே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிபார்சு செய்யப்படும் பயிர்களுடன், மறு பயிர்கள் வளர்வதற்கு ஒவ்வாத சூழ்நிலைகளிலும் பனையைப் பயிரிடலாம் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் எண்ணம் சிலரிடம் நிலவுகின்றது.

1921ம் ஆண்டு, 1 ஏக்கர் பனந்தோட்டத்தில் ரூபா 1800/- தொடக்கம் ரூபா 3000/- வரை பெறுமதியான தொகையை வருமானமாகப் பெறலாமென பேராசிரியர் இ. பிளாட்டர் ( **E. Blatter** PhD. F. L. S, ) கணக்கிட்டு கூறியுள்ளார். பனைமரத்திலிருந்து நாம் உபயோகிப்பதற்குப் பெறக்கூடிய பொருட்கள் கணக்கில் அடங்கா.

1946-ம் ஆண்டு தொடக்கம் பனைமரத்திலிருந்து பெறப்படும் சில பொருட்கள் மூலம் பிற நாட்டு நாணயத்தை நாம் பெறமுடியுமென்பதை எமது பொருளாதார நிபுணர்களும் அரசாங்க ஆலோசகர்களும் அறியாமல் இருந்தது, இன்றைய சூழ்நிலையில், மிகவும் வருந்தத் தக்கது. இலங்கையில் தேடுவாரற்ற நிலையில் பனை மரங்களின் செல்வத்தை அறியாதிருந்த மக்களுக்கு 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மதிப்பார்ந்த தோட்டத் தொழில் அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு, வீ. சிவசுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்டு பனம் பொருட்களில் வர்த்தகத்தை லாபகரமாகச் செய்யலாமென ஆராய ஒரு குழுவை நியமித்தது ஓர் எடுத்துக்காட்டாகும். அரசாங்கம் இப்பிரதேசங்களில் மறைந்து கிடக்கும் வளங்களில் அக்கறை காட்ட முன்வந்திருப்பது எமது அதிர்ஷ்டம் போலும்.

இலங்கையின் பனம் கருப்பநீரை மூலப் பொருளாகக் கொண்டு - 1916ம் ஆண்டு ஒரு சீனித் தொழிற்சாலையை பருத்தித்துறையில் தொடங்கியபோதும், கடந்த 54 வருடங்களாக கற்பக விருட்ஷமாகிய பனையின் பொருட்களை குடிசைக் கைத்தொழிலோடு மட்டும் மறந்துவிட்டு இருந்தமை, எமது கவலையீனமேயாகும். விருத்தியடைந்த நாடுகளாகிய யப்பான், மேற்கு ஜேர்மனி, கனடா, போன்ற பிரதேசங்களுக்கு 1968-69ம் ஆண்டு இந்தியாவிலிருந்து ரூபா 20,000,000 பெறுமதியான நாம் அடுப்பில் போட்டு எரிக்கும் கங்கு மட்டையின் நார்கள் விற்பனையாயிற்று என்று கூறினால் பெரும்பாலோருக்கு அதிசயமாக இருக்கும். ஆனால் இது உண்மை. “கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல்” 1965ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 129 அந்தர் கங்கு மட்டை நார் ரூபா 15,068க்கு, ஒரு அந்தர் ரூபா

117/- வீதம் இறக்குமதியாயிற்று என்றால் நம்மால் நம்ப முடியாதுதான். ஆனால் இதுவும் உண்மை. பாடசாலை செல்லும் இளம் பிள்ளைகள் மூலம் கங்கு மட்டைகளை சேகரித்து நம்மால் தூரிகை, கூட்டுமாறு போன்றவற்றைச் செய்து விற்பனை செய்ய முடியா விட்டாலும், அதை அடுப்பில்போட்டு எரிக்காமல், பிறநாட்டிற்கு ஏற்றுமதி செய்தாகிலும் பிறநாட்டுப் பொருட்களையும் நாணயங்களையும் ஏன் பெறமுடியாது?

அரசாங்கம் தற்போது ஒரு ஏக்கர் புதிய முறை தேயிலைச் செடி அமைக்க சொந்தக்காரருக்கு ரூபா 3000/- வரை உதவிப் பணம் கொடுக்கின்றது. ஆனால் பனைமரத்தை உண்டாக்குவதற்கு ஊக்கம் கொடுப்பதாகத் தெரியவில்லை. இலங்கையில் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 50,000 ஏக்கர் வரை முதிர்ந்த பனை மரங்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த மற்றைய பகுதியிலும்,கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், தென் மாகாணம் போன்றவற்றிலும் பனம்தோட்டங்கள் ( வடலிகள் உட்பட ) காணப்படுகின்றன. பரப்பளவில் கணக்கிடப்பட்டால் தேயிலைத் தோட்டப் பரப்பளவிலும் பார்க்கக் கூடுதலாகவே இருக்கும் இவற்றைப் பயன்படுத்தினால் தேயிலையைப் போன்று அதிக பயன் பெறவாம். பனை ஒரு களை என்று நாம் கவனிக்காமல் விட்டாலும், அவை குறைந்த வளம் கொண்ட மறு பயிர்கள் வளர்வதற்குத் தகுதியற்ற சூழ்நிலையிலும், உபயோகப்படுத்த முடியாத தரைகளிலும் வளர்ந்து ஏதோ வகையில் பயன் தந்து கொண்டுதான் இருக்கின்றது.

அண்மையில் காலிப் புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடையொன்றில் ஒரு சிறு பனம்பழத்தின் விலை 35 சதம் என்று கூறினார்கள். அதே வேளையில் அங்கு ஒரு தேங்காய் 20 சதத்திற்குப் பெறக் கூடியதாக இருந்தது. ஆனால் வடபகுதியில் பனம்பழங்கள் மாடுகளாலும் கவனிக்கப் படாமல், விழுந்த இடங்களில் கிடந்து முளைப்பது எமது அறியாமையா? அல்லது சோம்பேறித் தனமா? என்னவென்று சொல்வது. எமது பொருளாதாரத்திற்கு ஏற்றம் கொடுக்கும் பொருட்களையே நாம் மதிக்காமல் இருக்கின்றோமே! என்று எண்ணும்போது வேதனைதான் தோன்றுகின்றது.

ஆடி, ஆவணி. புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் கிடைக்கக் கூடிய பனம்பழங்கள் மூலம் பெறப்படும் சாறிலிருந்து ஜாம் ஜெலி, இனிப்புப் பண்டம், சொக்லேட் போன்ற பொருட்களைத் தயாரித்து பாதுகாப்பாக அவற்றைத் தகரங்களில் அடைத்து எமது நாட்டின் தேவையை ஓர் அளவிற்குப் பூர்த்தி செய்யலாம். எமது பொருளாதார நிபு



ணர்கள் இவற்றைக் கவனிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

இந்தியாவில் நுங்குகளை வெட்டி எடுத்துத் தகரத்தில் அடைத்து விற்பனை செய்கின்றார்கள். இலங்கையிலும் அம்முறையைப் பின்பற்றி நுங்குகளை தகரத்தில் அடைத்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம். கருப்பநீரை, தென் இந்தியாவின் சில பகுதிகளில் குளிர் பானமாக அரைப்பைந்து போத்தலில் அடைத்து 25 சதத்திற்கு விற்பனை செய்கின்றார்கள். இலங்கையின் பல பகுதிகளில் கள்ளு, கருப்பநீர், பனங்கட்டி போன்றவற்றுக்குப் போதிய கிராக்கியிருப்பதால் கூட்டுறவுத் துறை மூலமாக உற்பத்தியை மேற்கொண்டு எமது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

பனங் கிழங்கிலிருந்து பெறப்படும் ஒடியல், புதுக்கொடியல் போன்றவற்றுக்கும், பனங்குருத்தோலை, ஈர்க்கு முதலியவற்றால் செய்யப்படும் கவர்ச்சியும் தரமுமுள்ள பன்னவேலைப் பொருட்களுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குறிப்பிடத்தக்களவு வரவேற்புண்டு.

பனை மரத்தின் வைரமுள்ள கீழ்ப் பகுதிகளையே இன்று வீடு கட்டுவதற்குத் தேவையான மரங்களாகப் பெருமளவில் (ஒரு கன அடியின் நிறை 65 இருத்தலாகும்) பாவிக்கின்றார்கள். ஆனால் பனை மரங்களின் இப் பகுதிகளைக் குறிப்பிட்ட சில கூடிய பெறுமானமுள்ள தேவைகளுக்கு மட்டும் பாவித்து மிகுதிப் பெருமளவு தேவைகளுக்கு வேறு மரங்களிலிருந்து பெறப்படுபனவற்றை பாவிப்பதன் மூலம் பனை வளங்களை அழிக்காமல் பேணிக்காக்க முடியும்.

பனம் விதை ஒன்று நாட்டுவது. தறித்து வீழ்த்தப்படும் பனை ஒன்றுக்கு ஈடு செய்வதாகாது ஏனெனில் பனையிலிருந்து முறையான பயனைப் பெறுவதற்குச் சராசரி அரை நூற்றாண்டு காலமாகின்றது. ஆனபடியால் முறையாக வளர்ச்சியடைந்து பயன்தரும் பனை மரங்களைத் தறித்தழிக்கும் பொழுது வளர்ந்த வடலிகள் அவற்றுக்கு ஈடு செய்யத் தக்கதாக, தனியாரை உணர்ந்து செயலாற்றும் வண்ணம் அரசாங்கம் தொடர்பாக இச்செய்கைகளைக் கண்காணித்தல் வேண்டும்.

இப்பொழுது நாம் கடைகளில் பணம் கொடுத்து வாங்குகின்ற பனங்கட்டிகளில் பத்து வீதமாவது பிற பொருள் கலந்தே இருக்கின்றது. இது விரும்பத்தக்கதன்று. எனவே பாவிப்போரின் விருப்பத்தையும். கவனத்தையும் கவருவதற்கு விற்பனைக்காக ஆக்கப்படும் பொருட்களின் தரம் ஒரு குறிக்கப்பட்ட இயல்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பனம் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களைச் சுகாதார முறையில் தயாரித்து அதன் தூய்மையும், தரமும் கெட்டுப்போகா

வண்ணம் மக்களைக் கவரத்தக்க விதத்தில் உகந்த உறைகளிற் போட்டு விற்பனைக்கு விடுதல் விரும்பத்தக்கது.

பன்ன வேலை செய்வோர், கருப்பநீர் சேகரிப்போர், பனங் கட்டி தயாரிப்போர், பனம் நார் பனம் பழம் ஆகியவற்றைப் பண்படுத்துவோர் கூட்டுறவுச் சங்க ரீதியில் தொழிற்படுவது விருப்பத்தக்கது. இதற்காகப் பனை மரங்கள் கூடுதலாகக் காணப் படுகின்ற பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுடன் "பனம் பொருள் உற்பத்திச் சங்கமும்" ஒரு அங்கமாக அமைதல் வேண்டும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் பகுதி இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுக்குக் கீழ் ஒரு பெரிய தாபனமாகச் செயற்பட வேண்டும். தனித் தனிச் சங்கங்களிலிருந்து கிடைக்கப் பெறும் பொருட்களைத் தரப் படுத்தி அவ்வப் பொருட்களுக்கு உரிய குறித்த இயல்புகளைக் கொண்ட பொருட்களாக விற்பனைக்கு விடுவதற்கும் இப்பொருட்களின் தரத்தைப் பற்றிய அறிக்கைகளைக் குறித்த அடையாளத்துடன் வெளியிடும் பொறுப்பையும் மேற் கூறிய பெரிய தாபனம் ஏற்று ஆவன செய்ய வேண்டும்.

வெளி நாடுகளிலும் உள் நாட்டிலும், பனையிலிருந்து பெறப்படும் தரமான பொருட்களுக்கு சந்தையைத் தேடுவதற்கும் விற்பனை வளத்தை பெருக்குவதற்கும் ஒவ்வொருவரும் தனியாகவோ அல்லது கூட்டமாகவோ தமது அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்ப முயற்சித்தால் எமது பொருளாதாரத்தை வளப்படுத்தலாம்.

**பனையிலிருந்து பெறப்படும் பொருட்களும் அதன் பயனும்**

(1) பனை ஓலை, கங்குமட்டை நார், பனம் விதைத் தும்பு இவற்றைப் பதனிட்டுத் தரப்படுத்துதல். இதில் பாடசாலைப் பிள்ளைகளும் தமது பங்கைச் செலுத்துவது விரும்பத்தக்கது.

(2) (அ) கருப்ப நீர்

(ஆ) பனம் கள்

இவை இரண்டையும் உள்நாட்டில் குளிர்பானமாக விற்பனை செய்யத் தக்க வசதிகளை ஏற்படுத்துதல். அரசாங்கம் பனம் கள்ளிலிருந்து சாராயம் வடிக்கும் தொழிலை விருத்தியாக்கினால் அவற்றைப் பிறநாடுகளுக்கு அனுப்பி விற்பனை செய்யலாம்.

(8) நுங்கு; இளமைப் பருவத்திலுள்ள பனம் காய்களை வெட்டி நுங்குகள் சேகரித்து அவற்றைப் பாதுகாப்பாகத் தகரங்களில் அடைத்து விற்பனை செய்யலாம்.

பனம் பழம்; பனம் பழத்திலிருந்து ஜாம், ஜெலி, சொக்லேட் போன்ற பொருட்கள் தயாரிக்கலாம்.

(4) (அ) ஒடியல்

(ஆ) புதுக்கொடியல்

புதுக்கொடியலைத் துண்டு துண்டுகளாக வெட்டி சீனிப் பாகுடன் கலந்து கவர்ச்சியான உறைகளிலிட்டு விற்பனை செய்யலாம்.

(5) (அ) பனை மரத்தின் வைரப் பகுதிகள்.

(ஆ) தும்பு அகற்றிய பனங் கொட்டை.

நமது பண்பாட்டை எடுத்துக் காட்டக்கூடிய சிற்பங்கள், பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள் செய்யலாம்.

இப்பொருட்களுக்குப் பிற நாடுகளின் உதவியுடன், கூட்டுறவு மூலம் விற்பனை வசதிகளைச் செய்தல் வேண்டும். இதனால் வேலையில்லாப் பிரச்சனைக்குத் தீர்வுகாணல், பொருளாதாரத்தில் ஏற்றம் காணல் ஆகிய எமது குறிக்கோள்களை நாம் அடைவதற்கு வழிவகுக்கலாம்.

*

# கவிதைக் கொத்து

## கனியவில்லை......!

சின்ன வயதுமுதல் சேர்ந்து வளர்ந்த அன்பை
என்னுமொரு அன்பாக்கிக் காலத்தில்
கனியுமென கண்ணியமாய்க் காத்திருந்தேன்,
காலத்தில் என்தனுக்கு — அது
கண்ணீரைத் தந்து கரைத்து வடித்ததம்மா!

இராக...

## ஒரு குழந்தையின் ஓலம்!

கட்டிலோ தொட்டிலோ நானெங்கு கண்டேன்
கிட்டிடும் தரையினில்
படுத்திடும் என்னை
எட்டி நின்றே
உதைக்குது உலகம்.

...தரலு...

## அன்பு......!

வீசட்டுமா...? என்று கேட்டு
என் உள்ளத்தில் அன்பு வீசவில்லை;
பரவட்டுமா..? என்று கேட்டு
என் உள்ளத்தில் அன்பு பரவவில்லை.
ஆனல்!
அன்பு .........!

..சுபா..

# ஆற்றல் மிகு கரத்தில்.........

சிறுகதை

சமூகம்

கே. டானியல்

மனதிலே சகிக்க முடியாத வேதனை ஏற்படும் போதெல்லாம் வேலன் சுடலை வயிரவருக்கு முன்னால் வந்து, புரண்டு புரண்டு அழுது விம்முவான், இது ஒன்று தான் அவனுக்குத் தெரிந்த ஒரே ஒரு வழி. சுடுகாட்டு வயிரவன் இன்னும் அவனின் மனக்குறையைத் தீர்த்து வைக்கவில்லை.

விடியும் வரை புரண்டு கண்ணீரைக் கரைய விட்டு, விடிந்ததும் எழுந்து, நலமுண்டுத் துண்டை உதறி அரையில் வரிந்து கட்டிக் கொண்டு, எந்தத் தாக்கத்திற்கும் உட்படாத மனிதனாக சுடுகாட்டைத் தாண்டிப் போய் விடுவான். இப்படி அவன் செய்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதை யாருமே பெரிது படுத்துவதில்லை பைத்தியம் போல அவன் அடிக்கடி இப்படித் தான் ஏதாவது செய்து கொண்டிருப்பான் என்று சகலரும் வாழாவிருந்து விடுகின்றனர்.

இன்று பகற்பொழுதில் கொள்ளி வைக்கப்பட்ட மனிதக் கட்டை ஒன்று எரிந்து நீறாகி அமைதி கண்டுகொண்டிருந்தது. ஊரில் உள்ள சின்னஞ் சிறுசுகளிலிருந்து கிழடுகட்டையாகி விட்டவர்களுக்கெல்லாம் பயந்து, ஒடுங்கி, தன்னையே குறுக வைத்துக் கொள்ளும் வேலனுக்கு இந்த மயானத்து அமைதி பயத்தை வருவிப்பதில்லை. பேய். பிசாசு என்ற ரகத்திலுள்ள எதையும் நினைத்து அவன் ஏங்கிச் செத்ததுமில்லை

சுடலையின் இடக்கோடியில் நரிகள் ஊளையிட்டுப் பிராண்டிக் கொண்டிருந்தன. அங்கே புதைக்கப்பட்டிருந்த மாடொன்றின் துர்நாற்றம் காற்றோடு கலந்து வந்து அவனை மோதியது. ஆனாலும் வேலன் அசைவற்றுப் போய் உலகத்தையும் தன்னையும் தனக்கேற்ற விதத்தில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறானா?



இரத்த உறவு என்ற விதத்தில் மனதிற்குத் தெரிந்த தாய் என்ற ஒரு கடமையை நினைத்துப் பார்க்கின்றான். அவள் என்றோ ஒரு நாள் செத்துப் போனாள், அவளின் கட்டையில் முழிக்கவேணும்......

★ ★ ★

அவன் தாய் என்ற சின்னி சின்ன வயதிலேயே பத்து மைல்களுக்கப்பால் உள்ள கந்தப்புக் கமக்காரன் வீட்டிற்கு இவனை அடிமையாக அனுப்பி விட்டாள். அதன் பின்பு அவள் அவனைப் பார்க்க வந்ததில்லை. இவனும் தாயைப் பார்க்க முடியவில்லை.

ஒரு நாள் கந்தப்புக் கமக்காரன் வீட்டிற்கு ஊரிலிருந்து இவனின் உறவினர்களான இருவர் வந்தார்கள். வேலனின் தாய் சின்னி செத்துப் போய் விட்டதாக இழவு கூறினார்கள். அப்போது கமக்காரன் நான்கு கட்டை மரவள்ளிக் கிழங்குகளையும், ஒரு நீற்றுப் பூசினிக்காயையும், அரைச்சாக்கு நெல்லையும் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தார். வேலன் இன்றி அவர்கள் வெறுமனே சென்றபோது வேலன் பெருங்குரல் வைத்து கேட்டான். ஒருதடவை, இரு தடவை, மூன்றுதடவை வேலனை அழ வேண்டாமென்று கமக்காரன் அதட்டினார். தண்ணீரும் மூன்று தடவைதான் பொறுக்கும் என்பார்கள். அதன்படியே பொறுத்த கமக்காரன் இறுதியில் கைப்பிரம்பால் வேலனின் முதுகில் ஒன்று வைத்தார். வேலன் பதைத்துப் போய் துடிதுடித்தான்- கமக்காரன் வீடே திரண்டு நின்று வேலன் துடிதுடித்துக் கதறியதை அதிசயமாகப் பார்த்து இரசித்தது.

இதன்பின் பத்து ஆண்டுகள் வரை வேலன் கமக்காரன வீட்டு அடிமையாக இருந்தான்.

அம்மாள், வேலனின் வயிற்றுச் சதையிலே பிடித்து இழுத்து முதுகில் குத்துவாள்

'சின்னக் கமக்காரன்' என்ற சின்னப்பயல் வேலனின் பிடரியிலே அடிப்பான்

' சின்ன கமக்காரச்சி ' என்ற சிறுக்கி வேலனின் செவியைப் பிடித்து திருகுவாள்.

பெரிய கிழட்டுக் கமக்காரன் தன் துப்பல் பணிக்கத்தை வேலன் மீது வீசுவார்.

'சின்னஞ் சிறிசுகள்' எல்லாம் வேலன் மீது எச்சில் துப்பி வேடிக்கை பார்க்கும்.

' கந்தப்புக் கமக்காரனும் இடையிடையே தனது கைத்தடியை வேலன் மீது சுழற்றி வீசத் தவறமாட்டார்.

காலை பத்து மணிக்குமேல் பழங்கஞ்சியும் பனாட்டும். மதிய வேளை தாண்டினால் 'தட்டுவத்தில்' சிறிதளவு சோறும் கறியும். இரவானால் எரிந்து போன

பண்டங்கள். உடு புடவை என்ற விதத்தில் அரையோடு ஒட்டிக் கிடக்கும் நலமுண்டுத்துண்டு, தலைக்கு எண்ணெய், குளிப்பு முழுக்கு என்பதெல்லாம் ஆசை அருமையாக அர்த்த ஜாமத்தில் பார்த்துக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான்!

வாழ்க்கையான இந்த நரகத்திலிருந்து மீண்டு கொள்ளும் நினைப்பு அவனுக்கு வந்ததில்லை. சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒரு நாள் அப்படி வந்து விட்டது.

பக்கத்து ஊர்வராரி அம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. அது கமக்காரனின் பேரில் நடந்தது. அதனல் வேலனை வீட்டோடு விட்டு விட்டு எல்லோருமே போய் விட்டனர். விடியப்புறமாக மேற்கு வீதியில் சுவாமி வலம் வரும்போது நடக்கும் இறுதிச் சின்னமேளக் கச்சேசரியும் முடிந்துதான் அவர்கள் வருவார்கள் என்பது வேலனுக்குத் தெரியும்.

வேலனுக்குத் திருட்டுப் புத்தி வரவே வரவில்லை. ஆனல் தன்னை அடையாளம் தெரியாமல் மூடிக்கொள்வதற்காக கமக்காரனின் மகரத நிறப்போர்வையை மட்டும் எடுத்துத் தன்னை மூடிக் கொண்டு கிளம்பி விட்டான். நன்ருக விடிந்த போது அவன் ஒரு புதிய கிராமத்தில் நின்ருன். ஊரில் எல்லோரும் அவனை மிரள மிரள நோக்கினர். இறுதியில் ஒருவன் அவனை நிதானமாகப் பார்த்து அவன் தோளிலிருந்த மரகதக் கம்பளத்தை இனங்கண்டு "டேய் நீ கந்தப்பர் வீட்டிலே... என்று வார்த்தையை முடிக்கு முன், வேலன் ஓடத் தொடங்கி விட்டான். நாலைந்து பேர் அவனைத் துரத்திப்பிடித்து உதைத்த பின்பு, ஊரின் கிராம அதிகாரி வீட்டில் வேலனை ஒப்படைத்தனர்.

நடுப்பகல் ஆவதற்கு முன் சதங்கைநாதம் கணீரென ஒலிக்க வில்லுவண்டியில் இராச கோலத்தில் கந்தப்புக் கமக்காரன் வருகை தந்தார். அதன் பின்... .........

★

ஒரு அடிமையைக் கட்டி வருவதுபோல வில்லு வண்டியின் வக்குக்குள் போட்டு வரப்பட்ட வேவன் வீட்டின் அடிமையாக்கப்பட்டான். சுதந்திரம் என்ற பெயரில் மூன்று தரப்பட்ட சலுகைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில் வேலனுக்கு "வாழ்வு" என்ற ஒன்று மீண்டும் கிடைத்து விட்டது. சில நாட்கள் போயின.

வேலனின் வாழ்வில் புதிதான ஒரு திருப்பம் ஏற்படுவதற்கான ஒரு நிலை எஜமானி அம்மாளால் கிடைத்தது.

ஏதோ ஒரு முக்கிய காரணமாக கமக்காரன் வெளியூர் போயிருந்தார், போனவர் நாலைந்து நாட்களாகியும் வீடு திரும்பவில்லை.

மிகுதி மறு இதழில்.



குட்டிக்கதை

# நான் சொன்னது சரி

— இணுவை வசந்தன் —

விடியற் காலை!

அப்பு தோட்டத்திற்குப் புறப்பட்டார்.

ச்......ச்......ச்...... பல்லியின் சத்தம்.

"கொஞ்சம் இருந்துவிட்டுப் போங்கோ பல்லி சொல்லுது." ஆச்சியின் சத்தம். அப்பு இருந்துவிட்டார்.

கொஞ்ச நேரம் செல்ல ... மீண்டும் புறப்பட்டார்.

ச்..... ச்......ச்... ..பல்லியின் சத்தம்.

"இந்தக் கோதாரியிலை போன பல்லி விடியற்காலத்தாலை சொல்லிக் கொண்டு நிக்கிதே ..... ! இஞ்சேருங்கோ இருந்துவிட்டுப் போங்கோ எனக்குப் பயமாய்க் கிடக்கு." இது ஆச்சியின் உபதேசம்.

"இஞ்சாரெண ஆத்தை பல்லி சும்மா சொல்லிக்கொண்டிருக்கும்போல நான் போய்விட்டுவாறன்."

ச்..... ச் .... ச்..... பல்லியின் சத்தம்.

ஆச்சி யோசித்துக் கொண்டிருந்தாள்.

ச்......ச்......ச்......பல்லியின் சத்தம்.

அப்பு திரும்பி வந்தார்.

"ஏன் திரும்பி வந்து விட்டியள்?" ஆச்சியின் குரல்.

"படலையைத் திறந்தன் பூனையொண்டு குறுக்காலை போகுது." அப்புவின் பதில்.

"நான் சொன்னன் போகாதேங்கோ எண்டு இப்ப பாத்தியளே நான் சொன்னது சரியாய்ப்போச்சு".

ஆச்சியின் குரலில் பரமதிருப்தி பிரதிபலித்தது.


## கற்பகம் பொங்கல் மலர்

ஈழத்து முன்னணி எழுத்தாளர்களின்
சிறந்த படைப்புக்கள் பலவற்றைத் தாங்கி
அதிக பக்கங்களுடன் கற்பகம் அடுத்த இதழ் பொங்கல் மலராக வெளிவரவிருக்கிறது. உங்கள் பிரதிகளுக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

– ஆசிரியர் குழு

*With the Best Compliments of*

# Elephant Beedi Company

*154, Sir Ratnajothi Sarawanamuthu Mawatha,*
*COLOMBO-13.*

Phone: 31651

பாவியுங்கள்

K. M. K. சாந்திபீடி

உரிமையாளர்கள்:

# சாந்தி பீடிக் கொம்பனி;

30, பிரதான வீதி,
புவாக்பிட்டிய.

ஈழத்து இலக்கிய வானில்

* புதியதோர் விடிவெள்ளி

# கற்பகம்

புதுமைப் படைப்புக்கள் பலவற்றைத் தாங்கி

வெளிவரும் இருதிங்கள் இதழ்.

இன்றே வாங்கிப் படியுங்கள்


இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவைக்காக, 88½, பாமன்கடை வீ